www.tamilarangam.net

# SÜDASIEN BÜRO e.V.

# தென் ஆசிய நிறுவனம்


மேற்கு ஜேர்மனி




Kiefernstr. 45
5600 Wuppertal 2
Tel. (0202) 50 71 56

sparkasse Wuppertal
Nr.: 26 85 40
BLZ 330 500 00

## தமிழ்ச் செய்திக் குறிப்பு இல 19 & 20




1. எனக்கு வாக்களித்தமைக்காக மக்களுக்கு என் நன்றி
   – ஜெனரல் எர்ஸாட்
2. பார் அதோ அழிகிறதே
3. நிட்சயமாக தேர்தலுக்காக பாவிக்கப்பட்ட அழியாத மையினால் வரையப்பட்ட போஸ்ட்டராகத்தான் இருக்கும்

(பங்களாதேஸ் அதிபர் தேர்தலில் மோசடிகள் செய்து மீண்டும் தெரிவானதை வர்ணிக்கும் கேலிச் சித்திரங்கள்)




## பழமொழிகள்- SPRICHWORTE PROVERBS.

1. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
   Allzuviel ist ungesund.
   Too much of anything is good for nothing.
2. புத்திமான் பலவான் ஆவான்.
   Wissen ist Macht.
   Knowledge is power.
3. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
   Nicht alles, was glänzt, ist Gold.
   All, that glitters, is not gold.
4. வெள்ளம் வருமுன்னே அணை கட்டு.
   Vorbeugen ist besser als heilen.
   Prevention is better than cure.

### திருக்குறள்-THIRUKKURAL-

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

Alle Buchstaben haben ihren Ursprung
im Buchstaben "A";
diese Welt hat ihren Ursprung in Gott.

All the letters have the letter "A"
as their origin;
this world has God as its origin.

## பாலர் தமிழ்

அரிச்சுவடி
ஆக்கம்:- த. யோகநாதன்
உதவி–மதில் டி புத்ரா
தொடர்புகட்கு
T. Yoganathan,
Studenwohnheim,
Pfaffenwaldring-48f5.6
7000Stuttgart-80
Tel.Nr.0711-6873846

5.12.86.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"தனையை பிரிந்தவன்" பார்த்திபன்

7.

முன் பின் தெரியாத யாரோ நன்கு அறிமுகமானவர்கள் போல் தன்னை அழைத்து வந்தது, வாடகைக்காருக்கு பணம் கொடுத்தது.

அதே நேரம் முத்துவுக்கு நண்பனின் கடிதம் ஞாபகத்திற்கு வந்தது.

ZDF ZDF ZDF ZDF ZDF ZDF ZDF

இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் சில Brudermord im Paradies என்ற விவரணப் படமாக 9.12.86 செவ்வாய் மாலை 7.30 க்கு ZDF (2) தொலைக்காட்சியில் காண்பிக்கப் படவுள்ளது. இது யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதய நிலையை விபரிக்கும் என நம்பப்படுகிறது.

ZDF ZDF ZDF ZDF DZ

'யாரையும் நம்பி விடாதே. சிநேகிதர்கள் மாதிரி பழகி உன்னிடமுள்ள காசு, உடுப்புகளை பறித்து விடுவார்கள், ஏமாற்றி விடுவார்கள். ஆண்களுக்கு பரவாயில்லை. பெண்கள் நிலைமைதான் மோசம். எழுத முடியாத நிலையிலெல்லாம் பெண்களுடன் நடந்து கொள்வார்கள். ஆனபடியால் நீ கவனமாக இரு.'

ஆனால் இன்று நேரிலோ எல்லாம் வேறு விதமாக இருந்தது. முத்துவால் எதுவும் செய்ய முடியவில்லை. புது முகங்கள் வலிந்து உதவி செய்தபோது அவனால் தட்டிக் கழிக்க முடியவில்லை. ஆனால் பயமாகவும் இருந்தது. நண்பனின் கடிதப் பிரகாரம் இவர்கள் ஏமாற்றி விடுவார்களோ என்று கவலையாகவும் இருந்தது.

ஹோட்டலுக்குள் இவனைக் கூட்டிக் கொண்டு போனார்கள். அங்குமிங்கும் பல தமிழ்கள் நடந்து கொண்டிருந்தன.

கொஞ்சம் உயர்த்ரமாக உடுப்பு போட்டிருந்த ஒருவரை அணுகி இவனைக் காட்டி ஏதோ கதைத்தார்கள். பிறகு இவனைக் கூட்டிக்கொண்டு மேல் மாடியில் ஒரு அறையைக் காட்டி விட்டார்கள்.

"நல்லா றெஸ்ற் எடும். பிறகு ஆறுதலா கதைப்போம்". அவர்கள் போய்விட்டார்கள்.

அந்த அறையில் இருந்தவர்கள் முத்துவை வரவேற்றார்கள். முத்துவுக்கு கூச்சமாக இருந்தாலும் சீக்கிரமே அவர்களுடன் பழக்கமாகிப் போனான்.

தண்ணீரின் உதவியுடன் சோர்வை அகற்றி சூடாக கோப்பி குடித்த பின் எல்லோரும் உட்கார்ந்து கலந்துரையாடினார்கள்.

முத்து தன்னுடைய சந்தேகத்தை தயக்கத்துடன் வெளியிட்டான்.

"அதெல்லாம் முந்திக்கான் ரண்டு மூண்டு வருஷத்துக்கு முந்தியெல்லாம் அப்பிடி நடந்ததுதாம். இப்ப ஒண்டும் இல்லை. ஆட்கள் திருந்திவிட்டினமோ தெரியாது. ஆனா எங்களைப் போல புதுப் புது ஆட்களெல்லாம் இப்ப இங்க பல இடங்களில் இருக்கிறோம். எல்லாருடைய பொறுப்பும் போக்கே உங்களைப் போல புதுசா வாறவைக்கு உதவி செய்யிறதுதான்."

இதைக் கேட்ட பின்தான் முத்துவுக்கு நிம்மதியாய் இருந்தது. பிறகு மனம் விட்டு கதைக்கலானான்.

"சிலோன் புதினங்களை சொல்லுமென்"

"ஜே.ஆர் என்னவாம்?"

"பெடியள் என்ன செய்யிறாங்கள்?"

"சனங்களின்ரை அபிப்பிராயங்கள் எப்பிடி?"

எல்லோரும் கேள்விகளைக் கொட்டினர். முத்து தனக்கு தெரிந்தவற்றை சொன்னான்.

அதன் பிறகு மேற்கு ஜேர்மனி புதினங்களை பற்றி முத்து விசாரித்து தெரிந்து கொண்டான்.

அந்த விடுதியில் தமிழ் ஆள்தான் மனேஜர் என்றும் நாளொன்றுக்கு 20 டி எம் வாடகை என்றும் அறிந்தான்.

"நீங்கள் எல்லாம் ஏன் இங்கேயே இருக்கிறீர்கள்?"

நாங்கள் மேற்கு பேர்லினுக்குள் வந்து டிரெயினில் வருகையில் பொலிஸ் எங்களைப் பிடித்துவிட்டது. அதனால் இங்கேயே நாங்கள் 'அசைல்' கேட்க வேண்டியதாயிற்று. கொஞ்ச நாளைக்குப் பிறகு எங்களை கேம்புக்கு அனுப்புவார்கள்."

பொலிஸின் கண்ணிலிருந்து தான் தப்பியது அதிர்ஷ்டமே என்று நினைத்தான் முத்து.

அப்போதுதான் அவனுக்கு மகேந்திரனின் ஞாபகம் வந்தது.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில்தான் இருவரும் பரிச்சயமானார்கள். அதன் பின் விமானத்தில் பக்கத்து பக்கத்து இருக்கை கிழக்கு பேர்லினிலும் ஒன்றாகத்தான் புகையிரத நிலையத்தை தேடினார்கள். மேற்கு பேர்லினில் தான் பிரிந்திருக்கிறார்கள்.

மகேந்திரன் எந்த முகவரியும் கொண்டுவரவில்லை என்பது முத்துவுக்கு தெரியும். அவன் எங்கே போயிருப்பான் என்று யோசனையாக இருந்தது. எனக்குப் போலவே அவனுக்கும் யாராவது உதவி செய்திருப்பார்களா என்று தெரியாமல் இருந்தது.

அந்த நாள் முடிந்து அடுத்த நாள். முத்து நாலரை மணி நேர வித்தியாசத்தில் மனிக்கூட்டை சரிசெய்திருந்தான் அறை நண்பர்களுடன் போய் பிரயாணிகள் காசோலையை மாற்றிக் கொண்டு வந்திருந்தான்.

அறைக்குள் போனபோது அங்கிருந்த ஆளைக் கண்டு ஆச்சரியப்பட்டான்.

(இன்னும் வரும்)

கதையில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அஸ்பிரின் 9-11-1986

# மிகப் பல சிகிச்சைப் பயன் தரும் மருந்து

உலகில் ஆகக்கூடிய காலம் பயன்பட்டு வரும மருந்தாகக் கருதப்படும் அஸ்பிரின், உலகில் மிகக் கூடுதலாகப் பாவிக்கப்படும் மருந்தாகவும் விளங்குகிறது. நோயாளருக்கு ஒத்துப்போகும் தன்மையில் காலத்தால் நிரூபிக்கப்பட்டு, விரிவான ஆராய்ச்சிச் சான்றுகள் கண்டு, ஏனைய மிகப் பல மருந்துகளையும் விட அது அதிக விளக்கம் பெற்றுள்ளதால், வைத்தியர்களும் பொது மக்களும் அதனைத் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள். அத்துடன் இருதய வியாதி, அதிர்ச்சி, மற்றும் பல நோய்களின் சிகிச்சைக்கு அது பயன் தருமெனப் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால், வைத்தியர்கள் அதனை மென்மேலும் அதிகம் உபயோகிப்பதைத் தாராளமாகப் புரிந்துகொள்ளலாம்.

வளர்ந்து வரும் அபிமானத்துடன் வைத்தியர்களும் பொது மக்களும் ஒருங்கே இன்றும் பாவிக்கும் உலகின் ஆகப் பழையமருந்தென்னும் மதிப்புக்குரியது அஸ்பிரின்.

இளங் கரும் சிவப்பு மலர்களைக் கொண்ட "வில்லோ" என்னும் மருந்துச் செடி இலைகள் நோய் தீர்க்கும் சக்தி பற்றி, கி. மு. 400-ம் ஆண்டில் ஹிப்போக்கிராட்டிஸ் என்னும் மருத்துவர் மூலவர் எழுதியதைத் தொடர்ந்து, 18-ம், 19-ம் நூற்றாண்டுகளில், ஐரோப்பிய இரசாயன விஞ்ஞானிகள் அந்த இலைகளின் சாரத்தை வடித்தெடுத்தும், தொகுத்தும் நோயாளர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அஸ்பிரினைத் தயாரித்தனர். இன்று அஸ்பிரின் காலத்தின் பரீட்சைகளுக்குத் தாக்குப் பிடித்து, பல நோய்களின் சிகிச்சைக்குச் சிறந்த மருந்தாகத் திகழ்கிறது.

இன்று உலகெங்கும் அஸ்பிரின் பாவனை பிரமிப்பூட்டும் 100,000 தொன் அளவு கொண்டது. அமெரிக்காவில் 20,000 தொன் அல்லது 6[illegible] கோடி மாத்திரைகளும், இலங்கையில் 30 கோடி மாத்திரைகளும் பாவிக்கப்படுவதாக மதிப்பிடப்படும் அஸ்பிரினின் அபிமானத்துக்கும் விரிவான பாவனைக்கும் காரணம் என்ன? முதலாவது காரணம், நிச்சயமாக, நோவு, காய்ச்சல் வீக்கங்களின் நிவாரணத்தில் அதன் சிகிச்சைத் திறம் தான். தலைவலி, பல்வலி, உடம்பு வலிகள், மாதவிடாய் வலி போன்ற நாளாந்த வலிகள், நோவுகளின் நிவாரணத்தில் மட்டுமன்றி, காய்ச்சலை விரைவில் குறைப்பதிலும் அஸ்பிரின் சிகிச்சைத் திறன் மிககது.

தடிமல் போன்ற மேற்புறச் சுவாசத் தொற்றுகளுக்கு நிவாரணம் அளிப்பதிலும் அஸ்பிரின் வல்லது. அதன் வலி நிவாரணத் திறனும், காய்ச்சல் தணிப்புத் திறன், அதன் வீக்க எதிர்ப்புத் திறன் என்பவையே இதற்குக் காரணம்.

பரசிட்டமோல்கொண்ட மருந்துகளில் காணப்படாத இந்த வீக்க எதிர்ப்புத்திறன் இல்லாத மூட்டு வீக்கத்தை குறைப்பதிலும் எலும்புவாத வீக்கங்களைத் தணிப்பதிலும் குறிப்பிடத்தக்க சிகிச்சை தருகிறது.

அஸ்பிரினின் ஒத்துபோகும் தன்மையை மேம்படுத்தி நீண்டகாலச் சிகிச்சைக்கு அதனை ஏற்றதாக்க, அது தற்போது கரையுருவம், இடைத் தடுக்குருவம், குடலுருவம், பெ[illegible]தியுறையுருவம் போன்ற பல்வேறு மாத்திரைத் தோற்றங்களில் தயாரிக்கப்படுகிறது. கரையக்கூடிய மாத்திரை மிகப் பெரும் பாலானவர்களுக்குப் பொருத்தமானது. அதன் துரிதமாக உறிஞ்சப்பட்டு செயற்படும் திறன், புதிய நோய் சிகிச்சைகளில் அதிக பயன்களையும் வழங்குகிறது.

இருதய நோய், அதிர்ச்சித் தாக்கச் சிகிச்சையில் புதிய பயன்கள்.

கடந்த பத்தாண்டுகளில் அஸ்பிரின் செயற்படும் விதம் பற்றி அதிக உண்மைகள் பெறப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன. தற்போது பிரபலமாகிவிட்ட டாக்டர் ஜோன் வேன் அவர்களின்கீழ் பணியாற்றிய விஞ்ஞானிகள் குழுவினால் இங்கிலாந்தில் இந்த ஆராய்ச்சி உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இரத்தத்திலுள்ள குருதித்தட்டுகள் திரட்சிபெறுவதைக் குறைப்பதன்மூலம் இரத்தக்கட்டு ஏற்படுவதைத் தணிக்கும் வன்மை காரணமாக குருதியுறைவு நோய் எதிர்ப்புச் சிகிச்சையில் அஸ்பிரின் வகிக்கும் சாதகநிலை மென்மேலும் விளக்கம்பெற்றுவருகிறது.

அஸ்பிரின் செயற்படும் விதம்பற்றிய இந்த விளக்கம் நோவு, காய்ச்சல் தவிர வேறு பல சிகிச்சைத்துறைகளுக்கு அஸ்பிரின் பாவிக்கும் யோசனைகளை மருத்துவ விஞ்ஞானிகளை முன்வைக்கச்செய்தது. இருதயத்துக்கும் மூளைக்கும் இரத்த விநியோகத்தில் சிக்கல்கள் உள்ள நோயாளிகளின் சிகிச்சை இந்த யோசனைகளில் குறிப்பிடத்தக்கது. சில பிரிவுகளைச் சேர்ந்த நோயாளிகளுக்கு இருதய வியாதி அல்லது அதிர்ச்சித் தாக்கம் ஏற்படுவதை அஸ்பிரின் குறைக்கக்கூடுமென்று சிகிச்சைப் பரீட்சைகள் [illegible]பிக்கின்றன.

இந்த விளைவுகள் காரணமாக பாரிசவாதம், மாரடைப்பு, தற்காலிக நோய்க் குறிப்புகளைத் தடுப்பதற்கு அஸ்பிரின் பாவிப்பதை அமெரிக்க உணவு மருந்து நிர்வாக நிறுவனம் அங்கீகரித்துள்ளது. இன்று மாரடைப்பும் பாரிசவாதமும் இரண்டாவதுமுறை ஏற்படுவதைத் தடுப்பதற்கு உலகெங்கும் டாக்டர்கள் மென்மேலும் அஸ்பிரின் பாவிக்கிறார்கள்.

சுகாதார, மனித சேவைகளுக்கான அமெரிக்க செயலாளர் மார்கிரெட் ஹெக்ளர் 1985 அக்டோபர் 10ஆம் திகதி நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் ஓர் அறிவித்தல் விடுத்தார். அது வருமாறு:

'மொத்தத்தில் முன்பே மாரடைப்பு ஏற்பட்ட நோயாளிகளில் ஐந்தில் ஒரு பகுதியினர் தினமும் ஒரு அஸ்பிரின் பாவித்தபோது மற்றுமொரு தாக்கம் அல்லது மரணம் ஏற்படும் சந்தர்ப்பம் குறைந்தவர்களாக அவர்கள் காணப்பட்டார்கள். திடமற்ற இடதுமார்பு நோவு கொண்ட இருதய நோயாளிகளைப் பொறுத்தவரை தினமும் ஒரு அஸ்பிரின் பாவிக்கும்போது மாரடைப்பு ஏற்படும் அல்லது அதனால் மரணிக்கும் அபாயப் பாகியளவு (அதாவது அஸ்பிரின் பாவித்தால் 12% பாவிக்காமல்விட்டால் 6% என்ற அளவில்) குறைந்தவர்களாக மூன்றுமாதப் பரீட்சையில் காணப்பட்டார்கள்.'

அஸ்பிரினின் மற்றும் விரிவான சாதகப் பாவனைகள் பற்றி மேலும் சிகிச்சைப் பரீட்சைகள் செய்யப்பட்டுவருகின்றன. ஆயினும் தலைக்குத்து வலி, பீனிசம், சிலவகை எலும்புப் புற்றுநோய் பரவல் மற்றும் பேதித்தன்மை நோய்களைத் தடுப்பதில் அஸ்பிரின் பாவனை பற்றிய சாதகமான விளைவுகள் காணப்பட்டுள்ளன.

100 வருடங்களுக்கு மேலாகப் பாவிக்கப்பட்ட பின் வலிகள், நோவுகளுக்கான சாதாரண மனிதனின் இந்த சிகிச்சை மருந்து மற்றும் பல மனித நோய்களின் வருங்கால உயிர்காக்கும் கருவியாக மாறியுள்ளது. இதனைபற்றிய புதிய கண்டுபிடிப்புகள் உலகின் மிகப் பழையதும் அதி விரிவான பாவனைச் சிறப்புமுள்ள இந்த உயிர்காக்கும் மருந்தின் பயன்மிக்க வருங்கால உபயோகத்துக்கு வெற்றிக் கொடி காட்டுகின்றன என

---

## தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் திடீர் முற்றுகைகள்
### ஏக காலத்தில்

10.11.86

மத்திய புலனாய்வுத்துறை போலிஸ் டைரக்டர் ஜெனரல் திரு. கே. மோகனதாஸின் நேரடி மேற்பார்வையில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள உதவி போலிஸ் சுப்ரிண்டன் தலைமையிலான போலிஸ்காரர்கள் இயக்க முகாம்களில் திடீர் முற்றுகையிட்டு இயக்கத் தலைவர்களைக் கைது செய்து நீண்ட விசாரணையின் பின்னர் இவர்களை விடுவித்தனர்.

சென்னை, மதுரை, திருச்சி, புதுக்கோட்டை, சேலம், செங்கல்பட்டு, தென்னாற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், வேதாரணியம் ஆகிய இடங்களில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஒரே நேரத்தில் பல்வேறு மாவட்டங்களில் உள்ள முகாம்களில் இத்திடீர்வேட்டை நடத்தப்பட்டதாக மதுரையிலிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

### முதல் தேடுதல்

முதலாவது முற்றுகை சென்னை அடையாறில் உள்ள தமிழீழ விடுதலை புலிகள் இயக்க தலைமையகத்தில் உதவி பொலிஸ் சுப்ரிண்டன் ஒருவர் தலைமையில் சுமார் முந்நூற்றுக்கு அதிகமான பொலிசார் ஆயுதபாணிகளாக முற்றுகையிட்டனர்

துப்பாக்கிகளை நீட்டியவாறு முகாமுக்குள் நுழைந்த பொலிசார் அங்கிருந்த அனைவரையும் சுவர் மதில் பின்புறமாக சார்ந்திருக்குமாறு பணித்தனராம். பின்னர் அவர்களை நிலத்தின் கீழ் அமர்ந்திருக்குமாறு பணித்து தேடுதல் நடத்தியுள்ளனர். இத்தேடுதலில் அங்கிருந்த பெருந் தொகையான ஆயுதங்களை மீட்டெடுத்ததுடன், பிரபாகரன், அன்டன் பாலசிங்கம் உட்பட இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் கைதாகினர். விசாரணைக்காக இவர்கள் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

### வட பழனியில் முற்றுகை

இதனைத் தொடர்ந்து வட பழனியில் உள்ள ஈரோஸ் இயக்கத்தின் அலுவலகம் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டது. அங்கு தலைவர் பாலகுமார் இல்லாததைத் தொடர்ந்து அண்ணாநகர் மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றில் இவர் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டு கைதானார். இவரது தகவலைத் தொடர்ந்து ஈரோஸ் இயக்கத்தின் சகல முகாம்களும் சுற்றி வளைக்கப்பட்டு

மறுபக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்பக்கத் தொடர்ச்சி

பெருந் தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

### சாலி கிராமத்தில் வேட்டை

டெலோ இயக்கத்தின் தலைமையகம் சாலிக்கிராமத்தில் முற்றுகையிடப்பட்டு அங்கு இயக்கத்தின் தலைவர் செல்வம், அவரது சகாக்களான - சுபாஷ், புருஷ்லி ஆகியோர் கைதாகினர். இங்கும் பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இந்த இயக்கத்தின் ஏனைய முகாம்களும் ஒரே நேரத்தில் முற்றுகையிடப்பட்டு அங்கும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

### திருமங்கலத்திலும் முற்றுகை

மதுரை மாவட்டத்திலிருந்து 20 மைல் தொலைவிலுள்ள திருமங்கலம் கிராமத்துக்கு விரைந்த பொலிசார் அங்கு இயங்கும் ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்தின் தலைமையகம் முற்றுகையிடப்பட்டது. இங்கு பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அங்கு அதன் தலைவர் பத்மநாபாவும், அவரது சகா சேகின்வானும் புதுடில்லி சென்றதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து முகாமிலிருந்த 14 பேர் கைதாகினர்.

### புளொட் அலுவலகம் முற்றுகை

மதுரை புளொட் அலுவலகத்தை உதவி பொலிஸ் சுப்பிரண்டன் தலைமையில் 50 பொலிசார் முற்றுகை நடத்தி பலரை கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

### மோகனதாஸ் தகவல்

காலை முதல் மாலை வரை தனது தலைமையில் நடத்தப்பட்ட திடீர் முற்றுகை தொடர்பாக டைரக்டர் ஜெனரல் திரு. கே. மோகனதாஸ் தகவல் தெரிவிக்கையில், "தனக்கு மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவின் பேரில் பல்வேறு மாவட்டங்களில் ஒரே நேரத்தில் முற்றுகை நடத்தப்பட்டது. சோதனையின் போது தீவிரவாதிகளிடமிருந்து எதிர்ப்பு இருக்கவில்லை.

திடீர் முற்றுகையுடன் தொடர்ந்து இயக்கங்களுக்கான சகல தொலைபேசி இணைப்புகளும் துண்டிக்கப்பட்டன.

கைதான இயக்க அங்கத்தவர்களில் முக்கியஸ்தர்கள் தனியாகவும் ஏனையோர் குழுக்களாகவும் விசேட பொலிஸ் புலனாய்வுத் துறையினரால் படம் எடுக்கப்பட்டனர்.

இச் சோதனைகள் ஒரே நேரத்தில் பல்வேறு இடங்களில் இடம் பெற்றதையடுத்து தமிழ் நாட்டில் பல இடங்களில் பர

பிரபாகரன், அன்டன் பாலசிங்கம்

## மற்றும் 30 பேர் பொலிசாரால் கைதாகி விடுதலை

தமிழகத்திலிருந்து கிடைத்த தகவலின்படி சென்னை இந்திரா நகரில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அலுவலகத்தில் பிரபாகரனும், அன்டன் பாலசிங்கமும் மேலும் முப்பது தீவிரவாதிகளும் கைதாகினர்.

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளிடமிருந்து நேற்று பொலிசார் ஆயுதங்களை பறிமுதல் செய்திருப்பதாக சென்னையிலிருந்து கிடைத்த தகவலில் இருந்து அறியப்படுகிறது.

தமிழக பொலிசாருக்கு திடீரெனக் கிடைத்த உத்தரவையடுத்து, இலங்கைத் தமிழ் தீவிரவாதிகளின் முகாம்களிலிருந்தும் வீடுகளிலிருந்தும் பெருந்தொகையான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் தமது பாதுகாப்புக்காக தத்தமது வீடுகளில் வைத்திருந்த தற்காப்பு ஆயுதங்களும் பொலிசாரால் பறிமுதல் செய்யப்பட்டதாக அறியப்படுகிறது.

இத் திடீர் நடவடிக்கை சென்னையில் உள்ள தமிழர் இயக்க வட்டாரங்கள் மத்தியில் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளன. இது தொடர்பான காரணங்களை அவ்வட்டாரங்கள் அறிய முனைந்த போது; மேலிடத்து உத்தரவின் பிரகாரமே ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் அமைச்சர் திரு. பண்ருட்டி எஸ். இராமச்சந்திரனும் புதுடில்லி சென்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

## லண்டனில் தமிழர்மீது தாக்குதல்

16-11-1986

லண்டன், நவ. 15

லண்டனில் இனவாதிகளின் தீக் குண்டுத் தாக்குதலுக்கு 3 இலங்கைத் தமிழர்கள் பலியாகி உள்ளனர். இத் தாக்குதலில் அவர்கள் தங்கியிருந்த வீடு தீக்கிரையாகி விட்டது.

அதிகாலை விடிவதற்கு முன் வீட்டின் மீது 3 குண்டுகள் எறியப்பட்டதாகவும், இது ஒரு இனத் தாக்குதல் என்றும், கொலை விசாரணைக்கு உட்பட்ட சம்பவம் என்றும் பொலிசார் கூறினர்.

எரியும் வீட்டிலிருந்து தப்பிய மேலும் 6 பேர் அதிர்ச்சியினாலும், புகையை சுவாசித்ததாலும் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இனத் துவேஷம் நிறைந்த ஈஸ்ட்ஹேம் பகுதியிலுள்ள இந்த வீட்டின் மேல் மாடி படுக்கை அறையிலிருந்து 3

# சபையில் கேட்டவை

மகரகம எம். பி.: யாழ்ப்பாணத்துக்கு விமான தில் போன கதை என்ன ஆனது?

அமைச்சர் லலித் அத்துலத்முதலி: அங்கு போ அவர் உங்கள் நண்பர் என்றல்லவா நினைத்தேன். எ ளது இராணுவத்தை கொன்றொழிக்க பாவிக்கும் அ தங்களை கையில் எடுத்து நான் ஒரு நாளும் இயக் பார்க்கமாட்டேன்.

அத்தனகல்ல எம். பி.: நானும் ஒரு நாளும் செ மாட்டேன்.

ஒரு குரல்: வீடியோவில் எல்லா விபரமும் இ இறது.

அமைச்சர் லலித்: அவர் அங்கு போனதால் இ ணுவ வீரர்களை விடுவிக்க முடியவில்லை. மிஞ்சி வீடியோ மட்டுமே.

அமைச்சர் லலித்: சு.க. எதிர்கால கனவு, எதிர் நேரம் ஆகியவற்றிலேயே உயிர் வாழ்கிறது. நிகழ்கா பற்றி அது சிந்திப்பதேயில்லை.

# 37 இலங்கைத் தமிழர்கள் கெய்ரோவில் தடுத்துவைப்பு!

## டென்மார்க், கிரேக்கத்தில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களாம்

கெய்ரோ, நவ. 11

தமிழ்த் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக்கூறப்படும் 37 இலங்கையர்கள் கெய்ரோ விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக எகிப்தின் மத்திய கிழக்கு செய்தி நிறுவனம் இன்று அறிவித்துள்ளது.

டென்மார்க்கிலும் கிரேக்கத்திலும் முன்னர் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட இந்த 37 பேரும் 8 டென்மார்க் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் கெய்ரோ விமான நிலையம் வந்தடைந்ததாக செய்தி நிறுவனம் கூறியுள்ளது.

கொப்பன்ஹேகனை வந்தடைந்த சமயம் இத்தமிழர்கள் தங்களது கடவுச் சீட்டுக்களைக் கிழித்தெறிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

## கண்ணிவெடி எதிரொலி:

# புல்லுமலை பகுதியில் 12 பேர் மரணம்

## மூவாயிரம் பேர் அகதிகளாக தஞ்சம்

(கள ..அரசரத்தினம்)

மட்டக்களப்பு புல்லுமலையில் திங்கட் கிழமை இடம் பெற்ற நிலக்கண்ணிவெடிச் சம்பவத்தை தொடர்ந்து அங்கிருந்து சுமார் 3 ஆயிரம் பேர் கொண்ட குடும்பங்கள் ஏறுவூரிலும் [illegible]காப்பா வெளியிலும் தஞ்சமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலக்கண்ணி வெடிச் சம்பவத்தின் எதிரொலியாக அனர்த்தங்களினால் 12 பேர் வரை இறந்துள்ளனர், இது தொடர்பாக மட்டக்களப்பு பிரஜைகள் குழுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எஸ். எம். பீட்டர், லக்ஷ்மி பீட்டர் (மனைவி). ஜோர்ஜ் பீட்டர் (8 வயது), திரு.

சாமி, சரோஜகம், செ துரை (பிள்ளைகளும்) மதி அமிர்தலிங்கம், தி கிருஷ்ணமூர்த்தி, இரா ணம், குழந்தைகளான தயா (8), சுதா (3), பி (பத்து மாதக் குழந் ஆகியோரே இறந்தவர் மேலும் சிலர் காயம துள்ளதாக பிரஜைகள் தெரிவித்தது.

இது இவ்வாறிருக்க வருடம் ஜூனில் இ பெற்ற அனர்த்தங்க போது உடைக்கப்பட்ட பகுதி வீடுகள் அண்மை மட்டக்களப்பு அகதி புனர்வாழ்வு கழகத்தி கட்டிக் கொடுக்கப்பட் தன. அவ் வீடுகள் தற் மீண்டும் சேதமாக்கப் கடைகளும் தீ வைக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் தரப்பில் பிரதான பங்காளியாக விடுதலைப் புலிகளை அங்கீகரிப்பது பயன் தரும்

10.11.1986

சென்னை.

இலங்கையின் தமிழ்ப் பிரதேசத்தின் முக்கிய பகுதியில் உள்ள உண்மையான நிலவரத்தை அறிந்தவர் திரு. வே. பிரபாகரன் தலைமையிலான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள சக்திமிக்க நிலையை அடிப்படையாகக் கொண்டே பேச்சுவார்த்தை முயற்சிகள் - நடவடிக்கைகள் நிச்சயம் முன்னெடுக்கப்பட வேண்டும். என்ற கருத்து இலங்கை தமிழர் பிரச்சினையை உன்னிப்பாக அவதானித்து வருபவர்கள் மத்தியில் வலுப்பெற்று வருகின்றது. புலிகள் இயக்கத்திற்கு இராணுவ ரீதியில், எந்த வகையான சவாலையும் விடுக்கக் கூடிய துணிவோ அன்றி ஆயுதங்கள் - ஆட்பலமோ வேறு எந்தவொரு தீவிரவாதக் குழுவுக்குமே இல்லை என்பதை யாழ்ப்பாணத்திலிருந்து வரும் கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

பேச்சுவார்த்தைகட்கான அடிப்படை நிகழ்ச்சித்திட்ட விதிகள், ஆகியவற்றை விடுதலைப்புலிகள் ஏற்புடையவையாகக் கருதுகின்றனவா என்பதில் தான் பேச்சுவார்த்தையின் கதி தங்கியுள்ளது என்றும் கருதப்படுகின்றது.

இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் பல்வேறுபட்ட தீவிரவாதக் குழுக்களுடன் மேலோட்டமான தெளிவற்ற ரீதியில் தொடர்பு கொள்வதிலும் பிரபாகரனின் இயக்கத்தை பேச்சுவார்த்தைகளில் தமிழ்த் தரப்பின் பிரதான பங்காளியாக (முழு அளவில் இல்லாவிட்டாலும்) அங்கீகரிப்பது பலன் தரும் என்பது ஒரு யதார்த்தபூர்வமான கருத்தாகவுள்ளது. இத்தகையதொரு தீர்மானத்தைக் காலப்போக்கில் எடுப்பதாக இருந்தால் இப்போதே அவ்வாறு செய்வது மிகச் சிறந்தது.

யாழ் பாணக் குடாநாட்டில் புலிகள் இயக்கத்தின் மேலாதிக்க சக்திமிக்க நிலை உத்தியோகபூர்வ ரீதியில் விசேடமாக இந்தியாவில் - அங்கீகரிக்கப்பட்டால் அவ்வியக்கத்தின் தலைவர்கள், பேச்சுவார்த்தை முயற்சிகளில் கரிசனையுடன் தீவிர பங்கெடுத்து, இலங்கை அரசுடன் இணக்கத் தீர்வைக் காண்பதற்கான மாற்றுத் திட்டமொன்றை உண்மையில் முன் வைக்க விரும்பக் கூடும் என்ற நம்பிக்கை தீவிரவாத இயக்கங்களின் போக்கைத் வெகு உன்னிப்பாக ஆராய்ந்தவர்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

தமிழ்ப் போராட்டத்தில் பெரும்பங்காற்றும் பிரபாகரன் பேச்சுவார்த்தை மூலமான சமாதானத் தீர்வு காண்பதற்கான எந்தவொரு சிக்கலான செயற்பாட்டிலும் ஆக்கபூர்வமான முறையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். என சமாதான முயற்சிகளில் தீவிரமாக தற்சமயம் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் உணவு அமைச்சர் பண்ருட்டி எஸ். இராமச்சந்திரனும் (தீவிரவாத இயக்கங்களுடன் பல மாதகால தொடர்புகளை அடிப்படை வைத்து) தெளிவாக அங்கீகரித்துள்ளார்கள்.

## அரசியல் அனுகூலம்

இந்த விடயத்தில் பிரபாகரனுடன் முதல்வர் எம். ஜி. ஆருக்கு உள்ள தனிப்பட்ட நெருக்கம் உண்மையிலேயே ஒரு அரசியல் அனுகூலம் என்றும் கருதப்படுகின்றது.

இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக புலிகள் இயக்கம் எழுத்து மூலம் தெரிவித்த கருத்துக்களை மேற்கூறப்பட்ட கருத்துக்களை வலுப்படுத்துகின்றன.

பேச்சுவார்த்தைகளிலான தமிழ் நிலைப்பாடு ஈழம் மட்டத்தில் அல்ல, ஆனால் ஒரே தனித்தமிழ் பிராந்தியம் அல்லது வடக்கு-கிழக்கு இணைந்த அமைப்பு என்ற கோரிக்கையின் அடிப்படையிலேயே உள்ளது என்பதை முதல்வர் இராமச்சந்திரனிடம் கையளிக்கப்பட்ட அறிக்கை எதுவித சந்தேகமுமின்றி தெளிவாகத்தெரிவிக்கின்றன. இது ஒரு முக்கிய அம்சமாகும்.

இலங்கை அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளின் உள்ளடக்கத்தை அவதானமாக ஆராய்ந்ததில் அவை போதுமானவையாக இல்லை என நாம் காண்கிறோம். எங்களது மக்களின் அடிப்படை அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்த அவை தவறுகின்றன, தனித்தனி மாகாண சபைத் திட்டமானது தமிழ்த் தாயகத்தை அங்கீகரிக்க வேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை மறுதலிக்கின்றது. இந்தத் தாயகமானது தெளிவாக அடையாளம் காணப்பட்ட பிரிக்க முடியாத வகையில் நிலத் தொடர்ச்சியாக சரித்திர ரீதியில் அமைந்த பிரதேசமாக விளங்குகின்றது என முதல்வரிடம் புலிகள் சமர்ப்பித்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விளக்கமான வாக்கியங்கள்

ஆனால் புலிகளின் பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ள மிகவும் விளக்கமான வாக்கியங்கள் பின்வருமாறு:

தமிழர்களின் தாயகமானது பிரிக்கமுடியாத தனியொரு பிராந்தியம் என்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டியது எந்தவொரு அரசியல் தீர்வுக்கும் அடிப்படையானது என நாம் வலியுறுத்துகின்றோம். இந்தக் கருத்து புலிகளின் தற்போதைய அரசியல் சிந்தனை என்னவென்பதை தெளிவுபடுத்துவதாக உள்ளது.

## ஒத்துப்போகும் அமைப்பு

இது இவ்வாறிருக்க ஈரோஸ் இயக்கம் பற்றி புலிகள் கருத்து தெரிவிக்கையில், ஈழம் தேசிய விடுதலை முன்னணியுடன் பாலகுமார் ஏன் இருக்கிறார் என்பதை எங்களால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் உண்மையான போராடுபவர்களை நாம் மதிக்கின்றோம் பேச்சுவார்த்தைகளில் ஒரு கனிஷ்ட பங்காளியாகவும் புலிகளால் ஒத்துப்போகக் கூடியதாகவும் விளங்கும் ஒரு பிரதான அமைப்பு [illegible] எனக் கூறியுள்ளனர். (இந்து)

## ஹம் நகர உதைப் பந்தாட்டப் போட்டி

5.11.86

ஹம்பேர்க்,

மேற்கு ஜெர்மனி ஹம் நகரில் வாழும் அகதிகளுக்கிடையில் ஹம் சமூகசேவைகள் திணைக்களம் நடத்திய உதைப்பந்தாட்டப் போட்டியில் இலங்கைத் தமிழ் அகதிகள் குழு வெற்றியீட்டியுள்ளது.

இப்போட்டியில் மூன்று ஈரானியர் குழுக்களும் மூன்று இலங்கைத் தமிழ் குழுக்களும் ஒரு போலந்து குழு, பங்களாதேஷ் குழுவொன்றும் போட்டியிட்டன.

இறுதிப் போட்டியில் இலங்கைத் தமிழர் குழு 5 கோல்களையும் போலந்துகுழு 4 கோல்களையும் போட்டது. இலங்கைத் தமிழர் குழு ஒரு கோலால் வெற்றியீட்டியது.

16.11.1986

சென்னை.

'இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக திராவிட முன்னேற்றக்கழகம் தற்போது மௌனம் சாதிப்பதனால் ஈழப் போராட்டத்திற்கு கழகம் முழுக்குப் போட்டுவிட்டதாக எவரும் கருதக் கூடாது' என்று தமிழ்நாடு தி.மு.க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி சென்னையில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

தமது கழகம் மௌனம் சாதிப்பதைக்கொண்டு தமிழ்நாட்டில் தமிழ்ஈழ போராளிகள்மீது பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையை ஒப்புக் கொண்டதாகவும் கருதிவிடக் கூடாது என்றும் அவ்வறிக்கையில் தெரிவித்துள்ள கலைஞர் அதில்மேலும் தெரிவித்துள்ளதாவது:

தி.மு.க.ஈழப் போராளிகளிடையே தொடர்ந்தும் ஒற்றுமையை வலியுறுத்தி வந்துள்ளது. எனினும், அவ்வியக்கங்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. ஒன்றையொன்று அழிக்கவும் முற்படுகின்றன.

தி.மு.க. ஈழத் தமிழர்களுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தியதோடு தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பை (டெசோ) உருவாக்கி மகாநாட்டையும் நடத்தினோம். இதனால் ஏற்படவிருந்த நல்ல விளைவுகள் பல டெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீசபாரத்தினத்தின் கொலையையடுத்து பாதிப்படைந்துவிட்டது.

இதனால் தி.மு.க.வுக்கும் தமிழ் மக்களுக்கும் மனக்குறை ஏற்பட்டது தவிர்க்க முடியாததே. எனது பிறந்த நாள் விழாவின்போது ஈழப் போராட்டத்துக்காக நிதி திரட்டப்பட்டது. அதில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கென ஒதுக்கப்பட்ட பணத்தைவந்து பெற்றுச்செல்லுமாறு பல கடிதங்கள் எழுதி அனுப்பியும் அவ்வியக்கம் அதனைப்பெற முற்படவில்லை. அத்துடன் அவ்வியக்கத்தின் தலைவர் தமிழீழம் உருவானால் ஜனநாயக முறையில் அல்லாது ஒருகட்சி ஆட்சி முறையே அமுலில் இருக்குமென அறிவித்ததையும் எம்மால் ஏற்க முடியாதுள்ளது.

தற்போது நாம் மௌனம் அனுட்டிப்பதனால் ஈழப் போராட்டத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டதாகக் கருதக் கூடாது.

ஈழப்போராட்டத்துக்கு முழுக்குப் போட்டு விட்டதாகக் கருதக்கூடாது — கருணாநிதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உளியனின் பார்வையில்

தீவிரவாதிகள் சுமார் 1000 பேரை தமிழ்நாடு பொலிஸ் சுற்றி வளைத்து ஆயுதங்களைப் பறித்து, விசாரணைக்கு அழைத்துச் சென்று பின் விடுதலை செய்ததேன்? இப்போது வீட்டுக் காவலில் வைத்திருப்பதேன்? உண்மையில் சார்க் மாநாடு தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கையாக மட்டுமா இவை நடைபெற்றன?

சென்னை சூளைமேடு பகுதியில் ஈ.பி.ஆர்.எல்.எப். துப்பாக்கிச் சூடுதான் சுற்றி வளைப்புக்குக் காரணமா? வேறு அரசியல் நோக்கங்களே கிடையாதா?

தமிழ்நாடு மாவட்டங்களில் தீவிரவாதிகளைச் சுற்றிவளைத்து தமிழ்நாடு பொலிஸ் விசாரணை நடத்திக் கொண்டிருக்கும் போதே முதலமைச்சர் ராமச்சந்திரன் டில்லி விரைகிறார். பிரதமர் ராஜீவோடு பேச்சுவார்த்தை வேறு நடத்துகிறார். இவற்றின் பின்னணியில் அரசியல் நோக்கங்களே கிடையாதா?

"தீவிரவாதிகள் தங்களுக்குத் தோன்றியபடி இங்கு (இந்தியாவில்) நடக்க முடியாது என்பதை நிரூபித்துக் காட்டவே பொலிஸ் சுற்றிவளைப்பு" என்கிறார் முதலமைச்சர் பிரதமரிடம் இப்படி அவர் எடுத்துச் சொன்னாராம் [illegible] போது. அப்படியானால் இதில் அரசியல் நோக்கங்கள் இல்லை? பிரதமரிடம் இதைச் சொல்லவா முதல்வர் டில்லி சென்றார்? பொலிஸ் சுற்றி வளைப்பு தமிழ்நாடு மாநிலத்தின் அதிகாரத்துக்குட்பட்ட விஷயம். டில்லி மத்திய அரசின் அனுமதி தேவையில்லை.

[illegible] ஏக்காலத்தில் அதற்கும் தொடர்பு இல்லை என மத்திய அரசு கை விரிக்கிறது.

"தாங்கள் விரும்பாத ஒரு தீர்வுக்கு தீவிரவாதிகளைக் கட்டாயப்படுத்தி இணங்க வைப்பதோ, பேச்சுவார்த்தைக்கு வரக் கட்டாயப் படுத்துவதோ மத்திய அரசின் நோக்கமல்ல" எனவும் மத்திய அரசு விளக்கம் தருகிறது. கடைசியில் தீவிரவாதிகளை இப்போது விரட்டி வைப்பவர்கள் யார்? எதற்காக? என்னும் விஷயத்தில் இந்தியா ஒளிந்து, மறைவாக நிற்கப் பார்க்கிறது? தெளிவாகப் பேசவில்லை. திம்பு மாநாடு தோல்வியில் முடிந்த கட்டத்தில், பண்டாரியின் பேச்சைக் கேட்டு, யாரோ மிகமிக மேலிடத்தில் உள்ள ஒருவர், மூன்று தீவிரவாதத் தலைவர்களை நாடு கடத்த உத்தரவிட்டு விட்டார். அதனால் ஏற்பட்ட அரசியல் சிக்கல், இந்திய அரசை வசமாக மாட்டி வைத்துவிட்டது. இலங்கைத் தமிழர் பிரச்சினை இந்திய அரசுக்குப் புரியாத ஒரு விஷயம் என்பதையும் நாடு கடத்தல் எடுத்துக் காட்டியது. இன்று வரை அந்த உத்தரவையிட்ட பெரிய மனிதர் யார் என்பது மர்மம்! அன்று வெளிநாட்டு விவகாரங்களில் ஜெக ஜோதியாக சுடர் விட்டுப் பிரகாசித்த பண்டாரி, செல்லாக்காசாகி இருந்த இடம் தெரியாமல் போய் விட்டார். அன்று செய்தது போன்ற ஒரு தவறை இந்தியா மீண்டும் இப்போது செய்யவில்லை என்று நினைக்கவே உளியன் விரும்புகிறான் —

ஈ.பி.ஆர்.எல்.எப். செய்த தவறுக்காக தீவிரவாதக் குழுக்கள் எல்லோரையும் சுற்றி வளைப்பது எப்படிப் பொருந்தும்? சட்ட ஒழுங்கு நடவடிக்கையாக மட்டும் இதைச் செய்திருந்தால், ஈ.பி.ஆர்.எல். எப். குழுவினருக்கு எதிராக அல்லவா நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்க வேண்டும்?

பொலிஸ் நடவடிக்கைகளின் நியாயம் அநியாயம் ஒரு புறம் இருக்க, தீவிரவாதிகள் சுற்றி வளைப்பின் போது பொலிஸ் நடந்து கொண்ட விதம் — அவர்கள் சாதாரணக் குற்றவாளிகளைப் போல் கொடூரமாக நடத்தப்பட்ட விதம் – பற்றியும் நல்ல அபிப்பிராயம் தெரிவிக்கப்படுவதில்லை. தீவிரவாதக் குழுக்கள் இது தொடர்பாக எம். ஜி. ஆரிடம் முறையிட்டிருக்கின்றன. உண்மையில் தீவிரவாதிகள் உட்பட சுமார் 1½ இலட்சம் இலங்கைத் தமிழர்கள் அங்கு அகதிகளாக, தமிழ் நாட்டின் தயவில் வாழ்கிறார்கள். ஒன்றரை இலட்சத்திற்கு அதிகமான தமிழர்கள் அங்கு வாழ்வது தமிழ்நாட்டின் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டு ஸ்திர நிலைக்கு பெரும் பிரச்சினையாகக் கூட இருக்கலாம். அகதிகள் அங்கு இருப்பதை அவர்கள் விரும்பாமல் கூட இருக்கலாம். தமிழ்நாடு பொலிஸுக்கு நிகராகவே ஓரளவு பாதுகாப்பு வேலைகளில் ஈடுபடும் தீவிரவாதிகள் மீது பொலிசாருக்கு ஆத்திரம் கூட ஏற்படலாம். தீவிரவாதிகள் ஆயுதம் தாங்கித் திரிகிறார்கள் — நல்ல ஆயுதங்கள். அண்ணா டி.எம்.கே., டி.எம்.கே., டி.கே. போன்ற அரசியல் கட்சிகள் தமிழர் பிரச்சனையை வைத்துக் கொண்டு தொடர்ந்து அரசியல் இலாபம் பெற்று வருகிறார்கள் என்ற எண்ணம். சுதந்திரக் கட்சி போன்ற சில தமிழ் நாட்டுக் கட்சிகளுக்கு, அவற்றிற்கு அது ஆத்திரம் கூடத் தரலாம்.

சூளைமேடு நிகழ்ச்சியின் உண்மைப் பின்னணி என்ன என்பதைப் பற்றி விசாரணை நடத்த யாரும் தயாராக இல்லை. தமிழ்நாடு அரசியல் கட்சிகளின் ஈடுபாடும் வேறு பிரச்சினைகளும் இந்த நிகழ்ச்சியின் பின்னணியில் இருக்கின்றனவா என்பதைத் தெரிந்து கொள்வது நல்லது. தீவிரவாதிகளின் தீவிரவாதச் செயல்களும் ஒரு வழியில் இலங்கை அரசை தமிழருக்கு மாகாண சபை அளவு முன்னேறத் தூண்டியது. என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. தீவிரவாதிகளின் தீவிரச் செயல்களோடு தமிழர் உரிமை விஷயமும் இரண்டறக் கலந்துள்ளது என்பதை யாரும் மறக்க முடியாது. இந்திய அரசும் இதை ஒரு போதும் மறக்க முடியாது.

தமிழர் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தீவிரவாதிகளை திடீரென ஒரு நாள் இந்தியா திம்புப்பேச்சுவார்த்தைக்கு வரச் சொல்லியது. திம்பு மாநாட்டில் அரசு இன்று முன் வைத்துள்ள அளவு கூட எதுவும் முன் வைக்காததால், பலன் ஏற்படாமல் பேச்சுவார்த்தை முறிவடைந்தது. இலங்கை அரசு சர்வ கட்சி மாநாட்டின் முடிவில் தமிழருக்கு எதுவும் தரத் தயாராக இருக்கவில்லை என்பது இந்தியாவுக்குத் தெரிந்த விஷயம். – வரலாற்று உண்மை. இலங்கை அரசு — இன்று தரப் போவதாகச் சொல்லும் மாகாண சபை, எவ்வளவோ இழுத்தடிப்புக்குப் பின், இந்தியாவின் தூண்டுதலுக்குப் பின், தீவிரவாதிகளின் தீவிர வாதச் செயல்களுக்குப் பின் வலுக் கட்டாயமாகக் கிடைக்கப் போகும் விஷயம். மயிலே மயிலே இறகுபோடு என்று தமிழர் எவ்வளவோ சொல்லியும் மயில் இறகு போடவில்லை. இன்று கூட எந்த இலங்கை அரசுத் தலைவர்களும் தமிழர்களுக்கு உரிமை மறுக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழர்கள் தங்கள் உரிமைக்காகப் போராடுகிறோம் எனச் சொல்லும் அதே வேளை, இலங்கை அரசுத் தலைவர்கள் இலங்கையில் நடப்பது வெறும் பயங்கரவாதம், உரிமைப் போராட்டம் அல்ல – மனித உரிமை மீறல்கள் இலங்கையில் இல்லை என்று மட்டுமே கூறுகின்றனர். இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. ஓர் பயங்கரவாதத்தை அழித்துக் கட்டும் கைங்கரியத்தில் தான் என அது கூறுகின்றது. மாகாணசபை சிங்கள மாகாணங்களுக்கும் தரக் கூடிய ஒரு விஷயம் – தமிழருக்கு மட்டும் தரக்கூடிய ஒரு விஷயம் அல்ல என சிங்கள மக்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசுத் தலைவர்கள். மனமுவந்து சமாதானத் தீர்வைத் தர அரசு விரும்பவில்லை என்பதால் தான் — இழுத்தடிப்பதால் தான் ஒரு வேளை இப்படி இந்திய அரசு பொலிஸ் நடவடிக்கைகளை தீவிரவாதிகளுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடுவதாகவும் இருக்கலாம். இந்தியாவின் ஒரு "பிரஷர் டக்டிக்"காகவும் இருக்கலாம். வெகு நல்ல நோக்கத்தோடு – சமாதானத் தீர்வை விரைவு படுத்துவதற்காகக் கூட இருக்கலாம். அப்படியே இந்தியாவின் நல்லெண்ணம் நிறை வேறுவதாக இருந்தாலும் சமாதான தீர்வு வந்தால் மாகாண சபையின் வட, கிழக்கு இணைப்பிற்கு ஜனாதிபதி ஜயவர்தன "சார்க்"கில் இடம் பெறும் ராஜீவ்– ஜயவர்தன பேச்சுவார்த்தையில் இணங்கி விட்டால் கடவுளுக்கு நன்றி. இந்திய நல்லெண்ண முயற்சிகளுக்கும் நன்றி. ஆனால் அப்படி நடக்காவிட்டால் (இலங்கை அரசோடு தமிழர் போராட்டம் தொடர்பாக பல காலம் பட்டு அனுபவித்ததால் இப்படி சந்தேகங்கள் வருகின்றன) முன் போலவே இழுத்தடிப்பு செய்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு வராமல் போனால், தமிழர் உரிமைக்காகப் போராடும் தீவிரவாதிகளும் ஏனைய தமிழரும், "நாங்கள் அப்போதே சொன்னோமே" எனச் சொல்ல வைக்கும் நிலை ஏற்படாமல் இருப்பதே நலம்.

"லெட் தெம் நொட் ஹாவ் "லாஸ்ட் லாவ்ப்"

---

## சிங்கப்பூர் ஜெயரட்னம் பதவி இழக்கும் ஆபத்து

12-11-1986

சிங்கப்பூர் பிரதமர் லீ குவான்யீயின் அரசியல்வைரியான எதிர்க்கட்சித் தலைவர் ஜா வா ஜெயரட்னம் 5 வருடங்கட்கு முன்னர் வென்றெடுத்த பாராளுமன்ற ஆசனத்தை இழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

தொழில்கட்சித் தலைவரான ஜெயரட்னத்தை மோசடிக்குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்றம் விதித்த ஒரு மாத காலச் சிறைத் தண்டனை மற்றும் 10 ஆயிரம் சிங்கப்பூர் டாலர்கள் தண்டத் தீர்ப்புக்கு எதிராக அவர் செய்த மேன்முறையீட்டு மனுவை இன்று உயர் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

சிங்கப்பூர் அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரகாரம், 2000 டாலர்களுக்கும் கூடுதலான தண்டம் அல்லது 12 மாதங்கட்கும் கூடுதலான சிறைத்தண்டனை விதிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர் தனது ஆசனத்தை இழந்தவராகின்றார்.

1926ஆம் ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி இலங்கையில் பிறந்த திரு. ஜெயரட்னம் தனது ஆரம்ப காலத்திலேயே மலாயாவுக்கு சென்றுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## 'தமிழர் தாயகம் என்ற நிலைப்பாட்டில் தமிழ்ப் போராளிகள் குழுக்கள் பிடிவாதமாக இருக்கின்றன. தாங்கள் கௌரவத்துடனும் மரியாதையுடனும் அங்கு வாழ இது அவசியம் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்' என்று தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் எடுத்துக்கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள தீர்வு யோசனைகள் தொடர்பாக தமிழ் போராளிகள் குழுக்கள் ஐந்தினது கருத்துக்களையும் எடுத்துக் கூறுவதற்காக கடந்த சனிக்கிழமை உணவுத்துறை அமைச்சர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரனுடன் புதுடில்லி சென்ற முதலமைச்சர், பிரதமர் ராஜீவ் காந்தியை பிரதமரின் இல்லத்தில் சனிக்கிழமையன்று சந்தித்துப் பேசினார். சுமார் அரைமணி நேரம் இந்த சந்திப்பு நடந்தது.

இலங்கையின் யோசனைகள் போராளிகளுக்கு முழுத் திருப்தியையும் ஏற்படுத்தவில்லை. அவர்கள் ஏறத்தாழ அதனை நிராகரித்துவிட்டார்கள் என்றும் முதல்வர் பிரதமரிடம் எடுத்துக்கூறினார்.

'வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டையும் தமிழர் தாயகமாகக் கருத வேண்டும் என்பதே அவர்களது நிலைப்பாடாக இருக்கிறது. இதனை வெவ்வேறாக பிரித்து அதிகாரப்பரவலாக்கல் செய்யப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. இதில் அவர்கள் பிடிவாதமாக இருக்கிறார்கள்' என்று முதல்வர் பிரதமரிடம் சுட்டிக்காட்டினார்.

பெங்களூரில் நடைபெறும் சார்க் உச்சி மகாநாட்டின்போது பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவை சந்திப்பார். அதற்கு முன்னர் தமிழர் நிலைப்பாடுகளை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ராஜீவ் முதல்வரை புதுடில்லிக்கு அழைத்து நிலைப்பாடுகளை கேட்டறிந்திருக்கிறார்.

### தீவிரவாதிகள் மீது நடவடிக்கை ஏன் ?

தமிழகத்திலுள்ள போராளிகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசாங்கம் நடத்திய திடீர் வேட்டை குறித்தும ராஜீவ் காந்தியிடம் முதல்வர் எடுத்துக் கூறினார்.

'போராளிகளுக்கு விடுக்கப்பட்டுவரும் முன்னெச்சரிக்கை இது. உங்கள் எண்ணப்படி நீங்கள் இங்கு நடந்துகொள்ள முடியாது என்பதை அவர்களுக்கு இதன் மூலம் எடுத்துக்காட்டியிருக்கிறோம்' என்று முதல்வர் பிரதமரிடம் கூறினார்.

### வெளியே செல்லத் தடை

சார்க் மகாநாடு நடைபெறும் காலத்தில் தாங்கள் தங்கும் பகுதிகளுக்கு வெளியே போராளிகள் எவரும் செல்லக்கூடாதென்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் முதல்வர் தெரிவித்திருக்கிறார். சார்க் மகாநாட்டுக்கான ஒரு முன்னெச்சரிக்கை ஏற்பாடே இது என்று பின்னர் சொல்லப்பட்டது.

பிரதமர் ராஜீவை சந்தித்துப் பேசிய பின்னர் முதல்வர் இந்திய வெளியுறவுத்துறை அதிகாரிகளை சந்தித்துப் பேசினார்.

### நெடுமாறன் கண்டனம்

இது இவ்விதமிருக்க, தமிழ்நாட்டில் போராளிகளுக்கு எதிராக நடத்தப்பட்டிருக்கும் பொலிசாரின் திடீர் தேடுதல்வேட்டையை தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பி. நெடுமாறன் வன்மையாகக் கண்டித்து இங்கு அறிக்கை விடுத்துள்ளார்.

''ஒரு சில இயக்கங்கள் இங்குள்ள பொதுமக்களிடம் தவறு இழைத்திருக்கலாம். அதற்காக அனைத்து இயக்கங்களையும் புண்படுத்தும் விதத்தில் பொலிஸார் நடந்துகொண்டிருப்பது கண்டனத்துக்குரியது'' என்று தெரிவித்திருக்கிறார்.

## வாக்குமூலம் பற்றி வீடியோ படமெடுப்பு

## மத்திய அரசாங்க அதிகாரிகள் அதிருப்தி

தமிழ் நாடு பொலிஸார் நடத்திய இத்திடீர் வேட்டை குறித்து, புதுடில்லியிலுள்ள மத்திய அரசாங்க அதிகாரிகள் சிலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர். தின் அரசியல் விளைவுகளை எதிர்பாராமல் மேற்கொள்ளப்பட்ட செயல் இது என இந்த அதிகாரிகள் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

போராளிகள் குழுக்களின் தலைவர்கள், பிரமுகர்கள், கைப்பற்றப்பட்ட கைதான உறுப்பினர்கள் பெயர்கள் விபரங்கள் யாவும் பொலிஸாரால் பதிவு செய்யப்பட்டன. பிறப்பு, வயது, அங்கம் வகிக்கும் இயக்கத்தின் பெயர், இந்தியாவில் தங்கியிருக்கும் காலம் போன்ற சகல விபரங்களும் தனித்தனியாக ஒவ்வொருவரிடமும் கேட்டுப்பதியப்பட்டன. தனித் தனியாக ஒவ்வொருவரும் படம் பிடிக்கப்பட்டார்கள். இயக்கத் தலைவர்கள், பிரமுகர்கள் பலரும் பல்வேறு கோணங்களில் வைத்து படம் பிடிக்கப்பட்டார்கள்.

### பிரபாகரனுக்கு தெரிந்த அரசியல்வாதி யார்?

இயக்க இல்லங்களில் பொலிஸ் முற்றுகை வீடியோ படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை விசாரித்த பொலிஸார் தமிழகத்தில் உமக்கு தெரிந்த அரசியல்வாதி யார்? என்று கேட்டனராம். அப்பொழுது அவர் 'எம். ஜி. ஆர்.' என்று பதிலளித்தாராம். இதேபோல் அன்டன் பாலசிங்கத்திடம் நீர் எந்த இயக்கத்தை சேர்ந்தவர்? என்று கேட்கப்பட்டதாம். அதற்கு அவர் ஆங்கிலத்தில் எல். ரி. ரி. ஈ. என்று பதில் கூறினாராம். அதனை விளங்காத பொலிஸ் அதிகாரி அதற்கான விளக்கத்தை முழுமையாக கூறும்படி கேட்டு பதிவு செய்து கொண்டாராம்.

### புதுடில்லியில் இவர்கள்

புளொட் இயக்கத் தலைவர் உமா மகேஸ்வரன், ஈ. பி. ஆர். எல். எப். தலைவர் பத்மநாபா, டெலோ தலைவர் சிறீசபாரத்தினம் என்று சொல்லப்பட்டது... கேதீஸ்வரன் ஆகியோர் புதுடில்லியில் தங்கியிருந்ததால் இவர்கள் கைது செய்யப்படவில்லை. ஏனைய இயக்கங்களின் தலைவர்களும், பிரமுகர்களும் உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு விசாரித்த பின்னர் விடுதலை செய்யப்பட்டார்கள்.

தலைவர், உறுப்பினர் என்ற பேதமின்றி சகலரும் ஒரே மாதிரியே பொலிஸாரால் கணிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். ஒவ்வொருவரிடமும் தனித் தனியாக வாக்கு மூலங்களும் பெறப்பட்டன. சுமார் ஆயிரம் பேர் இவ்வாறு விசாரிக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

### மத்திய அரசின் அனுமதி இல்லை

இந்திய மத்திய அரசாங்கத்தின் முன் அனுமதி இன்றிய இத்த திடீர் வேட்டை நடத்தப்பட்டதாக இங்குள்ள பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் இப்படி ஒரு திடீர் வேட்டை மேற்கொள்ளப்படுவதாக தமிழ்நாடு, மத்திய அரசாங்கத்துக்கு கடந்த வெள்ளிக் கிழமை முன்கூட்டியே தகவல் கொடுத்திருந்ததாம்.

தமிழ்நாட்டை அடுத்துள்ள மாநிலமான கர்நாடகத்தின் தலைநகரான பெங்களூரில் 'சார்க்' உச்சி மகாநாடு இந்த வாரம் இறுதியில் நடைபெறவிருப்பதாலும் இலங்கை-இந்தியா உட்பட 7 நாடுகளின் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொள்வதாலும் முன் பாதுகாப்பு நடவடிக்கை ஏற்பாட்டின் ஒரு பகுதியாக போராளிகளுக்கு எதிராக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென இங்குள்ள வட்டாரங்கள் கருதுகின்றன. பெங்களூர் சென்னையிலிருந்து நூறு மைல் தொலைவிலேயே உள்ளது.

துண்டிக்கப்பட்ட இயக்க தலைமையகங்களின் தொலைபேசி தொடர்புகள் நேற்று மீண்டும் வழங்கப்பட்டன.

தமிழ் நாட்டின் பல் வேறு பகுதிகளிலும் போராளிகளுக்கு எதிராக பொலிஸார் எடுக்கும் இந்த திடீர் வேட்டை சென்னையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சில வட்டாரங்களில் அதிருப்தியையும் தந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'அரசின் வீம்பினால் அப்பாவி சிங்கள இளைஞர் மடிகின்றனர்'

## விஜயகுமாரணதுங்க சாடுகிறார்

15.11.86

நாவலப்பிட்டி,

இன்று ஏழை மக்கள் அன்றாட வாழ்க்கையை எப்படிச் சமாளிப்பது என தங்களுக்குள்ளே பெரிய போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்கே அவர்கள் எரிமலையாகக் குமுறி விடுவார்களோ என்ற பயத்தில் இன்றைய ஆட்சியாளர் வடபகுதிப் பயங்கரவாதச் செயலைப் பூதாகாரமாக்கிக் காட்டி மக்கள் கவனத்தைத் திசை திருப்பி வருகின்றனர். இதற்கு ஒரு சில பத்திரிகைகளும் தூபம் போட்டு பிரசாரம் செய்கின்றன.

இவ்வாறு ஸ்ரீ லங்கா மகாஜன கட்சியின் தேசிய அமைப்பாளர் திரு விஜயகுமாரணதுங்க நாவலப்பிட்டியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கட்சியின் நாவலப்பிட்டி அமைப்பாளர் திரு. தர்மசேன தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசியதாவது:

இன்று நாட்டின் நிதி தினமும் இலட்சக் கணக்கில் இராணுவ நடவடிக்கைக்காக செலவிடப்படுகிறது. அவ்விதம் விரயமாகும் பணத்தினால் நாட்டில் அமைதியையோ சிங்கள பெரும்பான்மை இன மக்களுக்கும் வடபகுதி தமிழ் மக்களுக்கும் இடையே ஒற்றுமையையோ ஏற்படுத்தி இந்த போரை நிறுத்தவிட முடியாது. நாளுக்கு நாள் இதனால் இரு சமூகத்தினரிடையேயும் உள்ள உறவு விரிசலடைந்து கொண்டே போகும்.

மக்கள் அமைதியுடன் வாழ வேண்டும். அதற்கு இராணுவத் தீர்வு முறையாகாது. சமாதான பேச்சு வார்த்தைகள் மூலமே இந்த பயங்கர சூழ்நிலையை மாற்ற முடியும். வடக்கில் காங்கேசன்துறை முதல் தெற்கில் அம்பாந்தோட்டை வரை இதையே நாம் கூறி வருகிறோம். இந்நாட்டு மக்கள் அனைவரும் முன்னால் இலங்கையின் சகல இடங்களுக்கும் போய்வர வேண்டும். அந்த தைரியத்தில் தான் சமாதான விருப்பியாக வடபகுதி புலிகளின் கோட்டைக்குள் புகுந்து உண்மை நிலையினை நேரில் பார்த்து உலகிற்கு எடுத்துக் காட்டினோம்.

நாங்கள் வடபகுதிக்குச் சென்றதன் பின்னரேயே அங்குள்ள உண்மை நிலையை எமது மக்கள் புரிந்துகொண்டார்கள். வடபகுதி போராளிகள் சிங்கள பெரும்பான்மை மக்களை எதிரிகளாக கருதவில்லை என்றும் ஆயுதபடையினரையே தமது எதிரிகளாக் கருதி போராடுவதாகவும் கூறியுள்ளார்கள்.

அரசின் வீம்புநடவடிக்கையால் எமது அப்பாவி சிங்கள சகோதரர்கள் ஆயுதமேந்தி தமது சம்பாத்தியத்துக்காக வடபகுதி சென்று போராடி இறக்கின்றனர்.

ஒரு பௌத்த பிக்கு தனது மடாலயத்துக்கு விடுத்த வேண்டுகோளில் ஒரு மாதத்திற்கு தனக்கு காவி உடையிலிருந்து ஓய்வு தந்தால் துப்பாக்கியுடன் வடபகுதி சென்று புலிகளை பலி வாங்கி யுத்தத்தை நிறுத்தி விடுவேன் என கூறியுள்ளார்.

அந்த பிக்கு துப்பாக்கியுடன் போனால் அவரது உடைமட்டும் இங்கு திரும்பும். அதைவிடுத்து காவி உடையுடனும் உணவுப் பாத்திரத்துடனும் வட பகுதி போய் அன்பைப் போதித்தால் ஒருவேளை சமாதானம் ஏற்படலாம் என்பதை அவர் உணர வேண்டும்.

கிழக்கில் பல நூறு வருடம் ஒற்றுமையாய் இருந்த தமிழ், முஸ்லிம் இனத்தவர்களை மொசாட் இஸ்ரேல் கூலிப்படையின் உதவியுடன் பள்ளிவாசலில் கலவரம் ஏற்படுத்தி சகிப்பாளரைக் கொன்று இரு இனத்தையும் எதிரிகளாக்கியவர்கள் யார் என்பதையும் மக்கள் இன்று தெரிந்துகொண்டனர். இத்தகைய அவலநிலை நீங்க ஒரு பொதுத்தேர்தல் நாடு பூராவும் இடம்பெறவேண்டும்.

கட்சித் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்க, கட்சி உப-தலைவர் திரு. ஒசி அபேசகர, திரு. தர்மசேன, திரு. எம். எஸ். ஞானரட்ணம் (தமிழில்) உட்பட பலர் உரையாற்றினர்.

---

பெங்களூர் பேச்சு தோற்றால் இஸ்ரேல் உதவியுடன் தாக்குதல்

15.11.86 புதுடில்லி,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக பெங்களூரில் இலங்கை, இந்தியத் தலைவர்களுக்கிடையில் இடம் பெறவிருக்கும் பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்காவிட்டால் இஸ்ரேலின் முழு உதவியையும் பயன்படுத்தி தமிழ் தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் ஆயத்தமாக இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

பெருந்தொகையான ஆயுதங்களை இஸ்ரேல் இலங்கைக்கு வழங்கியிருக்கிறது. ஆயுதங்கள் நேரடியாக இஸ்ரேலிலிருந்து அனுப்பப்படாமல் மூன்றாவது நாடொன்றின் துறைமுகத்திலிருந்து இலங்கைக்கு வந்துசேருகிறது

இலங்கை அரசு சீன அரசிடமிருந்து துருப்புகளை ஏற்றிச் செல்லக்கூடிய வை. 12 ரக மூன்று விமானங்களை வாங்கவுள்ளது.

இதேவேளை இலங்கை கடற்படை ஒன்பது சக்தி மிக்க படகுகளை இஸ்ரேலிடமிருந்து கொள்வனவுசெய்வதற்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இது ஏற்கனவே கொள்வனவுக்கு உடன்பாடான ஆறு படகுகளைவிட மேலதிகமானதாகும்.

(இந்து)

---

23.11.86.

# மலையகத்தில் பயங்கரவாதம் பரவாமலிருக்க பார்த்துக்கொள்ளுங்கள்!

## ஜனாதிபதி வேண்டுகோள்

(எம். ஏ.எம். நிலாம்)

வடக்கு, கிழக்கை ஆட்கொண்டுள்ள பயங்கரவாதம் மலையகத்திலும் பரவாமலிருக்க உரிய நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜயவர்தன தோட்டத்துரைமார் சங்க பொன் விழாவில் அமைச்சர்கள் தொண்டமான், காமினி திசாநாயகா ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை தோட்டத்துரைமார் சங்கத்தின் பொன் விழா நேற்று கலதாரி மெரிடியன் ஓட்டலில் நடை பெற்றது.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்தன இவ்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து பேசுகையில் மேலும் கூறியதாவது:—

"மலையகத் தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் இரண்டு தொழிற் சங்கங்கள் எனது அரசாங்கத்தோடு இணைந்து செயற்படுகின்றன. அவற்றின் தலைவர்களான திரு. தொண்டமானும், திரு. காமினி திசாநாயகாவும் எனது அமைச்சரவையில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்களாக இருக்கின்றனர்.

சக்திமிக்க இந்த இரண்டு தொழிற்சங்கங்களும் இணைந்து மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பயங்கரவாதத்திலீடுபடாதிருக்கக் கூடிய பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும். மலையகத்தில் பயங்கரவாதத்தை பரப்ப சில சக்திகள் முனைந்து வருகின்றன. அதற்கு எந்த வகையிலும் இடமளிக்கக் கூடாது.

வடக்கு, கிழக்கு பயங்கரவாதத்தால் இந்தநாடு பாரிய அபிவிருத்தி முன்னேற்றத்திலிருந்து பின் தள்ளப்பட்டுள்ளது.

சார்க் நாடுகளின் டாக்டர்களும், சட்ட வல்லுனர்களும், பொறியியலாளர்களும் மாநாடு நடத்துகின்றனர். ஏன் பயங்கரவாதகளும் ஒன்றுபட்டு மகாநாடு நடத்தி தங்களைப் பற்றியும், தம் நாடுகளைப் பற்றியும் சிந்திக்கக் கூடாது? எனக் கேட்க விரும்புகிறேன்.

எமக்கு இன்று அமைதியும், சமாதானமும் தேவை. அதற்கான பணிகளை நாம் முன்னெடுத்துச் செல்வோம்.

தோட்டத் தொழிலாள வர்க்கத்துக்கு நிறைய பிரச்சினைகள் இருப்பதை நாம் மறுக்கவோ, மறக்கவோ முடியாது. அவற்றுக்கு உரிய தீர்வுகள் காணப்பட வேண்டும். அதற்கான பணிகளை எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட அனைவரோடும் இணைந்து அரசு மேற் கொள்ளும்.

தோட்டத்துரைமார் சங்கம் கடந்த 50 ஆண்டுகளில் மேற் கொண்ட பணிகள் மெச்சத்தக்கனவாகவும், பயன்மிக்கதாகவுமே இருந்துள்ளதை நாமறிவோம். அதன் இந்தப்பணி தடம் புரளாமல் தொடரவேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்"

www.tamilarangam.net

...ப்பிரச்சனைத் தீர்வுக்குரிய மார்க்கமாக நாம் யுத்தத்தை நினைக்கவேகூடாது. யுத்தத்துக்கு தயாராகவும் கூடாது. சமாதானமே இன்று அவசியம். இன்றேல் நாடே அழிந்துவிடும்" என்று பிரதி நிதி அமைச்சரும், செங்கடகல எம். பி.யுமான திரு. ஷெல்டன் ரணராஜா நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் வலியுறுத்தினார். 20.11.86

"எமது நாட்டுக்கு இன்று தேவைப்படுவது சமாதானமே. அதனை ஏற்படுத்த அனைவரும் இன, மத பேதங்களை மறந்து ஜனாதிபதிக்கு உதவவேண்டும். ஜனாதிபதி ...ழுநாட்டினதும் ஜனாதிபதி. எல்லா மக்களினதும் ஜனாதிபதி. நாம் ஜனாதிபதியுடன் இணைந்து செயல்பட்டால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கஷ்டமே அல்ல" என்றார் அவர்.

பெங்களூர் சென்ற ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வினை சமாதான முறையில் நாம் காணவேண்டும். நிதியமைச்சர் விரும்புவது போல அடுத்த வருடத்தை சமாதான வருடமாக ஆக்க வேண்டும் என்றும் திரு. ரணராஜா வலியுறுத்தினார்.

மக்களைக் கொல்லும் ஒவ்வொரு துப்பாக்கி வெடியும் தமது இருதயத்தை துளைப்பது போன்று தம் உணருவதாக ஜனாதிபதி கூறியிருக்கிறார். எனது உணர்வும் இதுதான். நாம் சிங்களவரோ, தமிழரோ, முஸ்லிம்களோ, பறங்கியரோ அனைவரும் ஜனாதிபதியின் சமாதான முயற்சிக்கு முழுமையாக உதவவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வாவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட பெருந்தொகை பணத்தையும் செலவிடக்கூடிய நிலைமை உருவாகக்கூடாது என்பதே எனது பிரார்த்தனை. இனப்பிரச்சினையால் நாடு பல்வேறு துறைகளிலும் பாதிக்கப்பட்டு வருகிறது என்றார்.

## 'தீர்வே எமது கோரிக்கை'

22.11

சென்னை;

பெங்களூரில் நடந்த பேச்சுவார்த்தையின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டும் கலந்து கொண்டது பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகத்திடம் அபிப்பிராயம் கேட்ட பொழுது, "யார் பங்கு பற்றினார்கள், யார் அழைக்கப்பட்டார்கள் என்பது பற்றி எங்களுக்குப் பிரச்சினை இல்லை. தீர்வு ஒன்றையே நாங்கள் கோரி நிற்கிறோம்" என்று கச்சிதமாக பதிலளித்தார்.

## லக்ஷ்மி நாகநாதன் தலைவர் 20.11.86

மேற்கு ஜேர்மனியில் அமைய வரும் தமிழ் ஈழ தகவல் மையத்தின் தலைவராக அந்நாட்டின் இலங்கைத் தூதராக விருந்த செல்வி, லக்ஷ்மி நாகநாதன் என்ற இலங்கை தமிழ்ப் பெண்மணி நியமிக்கப்பட்டிருப்பதாக இந்திய லோக் தளக் கட்சியின் எம். பி. யான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பழம் பெரும் தலைவரும் முன்னாள் செனட்டருமான டாக்டர் நாகநாதனின் மகளான செல்வி லக்ஷ்மி இலங்கை வெளியுறவுச் சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவர் அண்மையில் அப்பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார்.

அடுத்த மாதம் முதல் செயல்படவுள்ள மேற்படி மையத்தின் துணைத் தலைவராக இலங்கையின் நிருவாகத் துறையில் சிரேஷ்ட அதிகாரியாக விருந்த கலாநிதி கே. விக்னேஸ்வரா நியமிக்கப்பட்டுள்ளார்.

## சென்னையில் தி. மு. க. தொண்டர்கள் கைது

19.11 சென்னை,

இந்திய அரசியல் சட்டத்தின் ஆட்சிமொழி சம்பந்தப்பட்ட ஷரத்துகள் உள்ள பகுதியை எரித்தமைக்காக தி.மு.க.வைச் சேர்ந்த ஐந்து எம் எல் ஏ.க்கள் உட்பட ...ார் முந்நூறு பேர் சென்னையில் கைதுசெய்யப்பட்டனர். பின்னர் இவர்கள் சென்னை மத்திய சிறையிலிருந்து நாட்களுக்கு ...றைவைக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் தி.மு.க. பொதுச்செயலாளர், திரு. கே. அன்பழகன், சட்டமன்ற உறுப்பினரான திரு. செல்வராஜன், ... பி. பொன்னுரங்கம், ... எஸ். பாலன். திரு... இளம்வழுதி ஆகியோர் ...ங்குவர்.

பார்க்டவுன், துறைமுகம், ராயபுரம், புரசைவாக்கம், டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் ஆகிய பகுதிகளில் இருந்து இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்: இந்தித்திணிப்பை எதிர்த்தும் ஆட்சிமொழி தொடர்பாக நேருவின் வாக்குறுதி அரசியல் சட்டத்தில் ...க்கவேண்டும் என்று ...ரியும் தி.மு.க. ஒருமாத ஆர்ப்பாட்டத்திற்கு ...டுசெய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சமாளிக்க வேண்டிய கஷ்டங்களை உணருகிறோம், 22.11

புதுடில்லி,

"இலங்கை இனப் பிரச்சினைப் பேச்சுவார்த்தை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டுள்ளதாயினும் இது குறித்து இறுதியான தீர்வொன்றை காணுவதற்கு முன்னர் சமாளிக்கவேண்டிய மிகப் பெரிய கஷ்டங்களை இந்திய அரசாங்கம் உணர்ந்திருக்கிறது" என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. என். டி. திவாரி வியாழக்கிழமை லோக சபையில் தெரிவித்தார்.

பெங்களூரில் இலங்கை ஜனாதிபதிக்கும், இந்தியப் பிரதமருக்கு மிடையில் இடம் பெற்ற பேச்சுக்கள் குறித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், திராவிட முன்னேற்றக் கழகத்தையும் சார்ந்த உறுப்பினர்கள் லோக சபையில் அமைச்சரிடம் விளக்கம் கோரிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பேச்சுவார்த்தை தொடர்பான விபரம் சபைக்கு அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## மண்டைதீவு கடலில் 32 தீவிரவாதிகள் கைது

பாதுகாப்பு தகவல் 19.11.

வட்டாரம் 19.11

கடலில் கடற்படையினர் மீது தாக்குதல் நடத்த வந்த 32 தீவிரவாதிகளை ஆயுதங்களுடன் கடற்படையினர் கைது செய்திருப்பதாக கூட்டுப்படைகளின் தலைமையகம் நேற்று தெரிவித்தது.

நேற்று முன்தினம் மாலை மண்டைத்தீவிற்கும் கற்முனைக்கும் இடையே சென்று கொண்டிருந்த ஒரு படகை கடற்படையினர்வழிமறித்து சோதனையிட்ட போது அவர்கள் கைதானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தண்ணீருக்குள் பயன்படுத்தும் 9 முகமூடிகள், தண்ணீருக்குள் வைக்கும் 11 வெடிக்கும் கருவிகள் ஆகியவை படகில் இருக்க கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தலைமையகம் தெரிவித்தது.

## நவம்பர் 23இல் வெளியேற வேண்டும் 19.11

தமிழருக்கு உத்தரவு

நியூயோர்க், நவ. 18,

அரசியல்புகலிடம் கோரி அது மறுக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த ஈழம் ஆதரவாளர் ஒருவரும் அவரது குடும்பத்தினரும் அமெரிக்காவைவிட்டு வெளியேறுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவில் விவசாயத்துறையில் பயிற்சி பெற்ற கந்தையா கே. நவரத்தினம் அவரது மனைவி, 2வயது புதல்வன் ஆகியோர் நவம்பர் 23 ஆம் திகதி நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என குடியேற்ற அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

தனது உயிருக்கும் தனது குடும்பத்தின் உயிருக்கும் இலங்கையில் உத்தரவாதம் இல்லையென அஞ்சிய தாம், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி அங்கத்தினர் என்றும் மூன்று ஆண்டுகளுக்குமுன்பு அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் கோரியதாகவும் நவரத்தினம் கூறினார். அமெரிக்காவில் அரசியல் புகலிடம் கோரியுள்ள நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர்களில் நவரத்தினமும் ஒருவராவார்.

இலங்கையில் தாம் துன்புறுத்தப்படலாம் என்பதற்கான ஆதாரங்களை அவர் நிரூபிக்கத் தவறிவிட்டார் என வெளிநாட்டுத் திணைக்கள ஆலோசகர்கள் கருதுகின்றனர்.

## புங்குடுதீவில் 30 பேர் கைது

...கொண்டிருந்தாக இந்தியா... கொண்டிருந்ததாக சந்தேகிக்கப்படும் 30 பேர் புங்குடுதீவில் வைத்து கடற்படை... ...னர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறின.

கைது செய்யப்பட்டோரில் இருவர் பெண்கள் இருவர் குழந்தைகள். 22.11

www.tamilarangam.net



# எம். ஜி. ஆர். — பிரபாகரன் சந்திப்பு

13.11.

சென்னை,

கடந்த 8ஆம் திகதி தமிழ்நாடு பொலிஸார் இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் தங்கியிருந்த இடங்களை முற்றுகையிட்டு அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றிய செயல் தீவிரவாத இயக்கங்களிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

பொலிஸ் முற்றுகையின் பின்னர் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச் சந்திரனை முதன் முதலாக நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் வே. பிரபாகரனும், டாக்டர். பாலசிங்கமும் தாங்கள் பொலிஸாரால் அவமானப் படுத்தப்பட்டதாக கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழ் நாடு பொலிஸார் மேற் கொண்ட இந்த "கடுமையான நடவடிக்கை" குறித்து ஏற்கனவே ஆட்சேபத்தைத் தெரிவித்த புலிகள் இயக்கம், "முன்கூட்டியே எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தால் மனப் பூர்வமாக தமிழ் நாட்டை விட்டு வெளியேறியிருப்போம்"

## பாலகுமாரின் கவலை

பொலிஸாரின் செயல், தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள "தமிழ் ஈழத்தின்" ஆயிரக்கணக்கான அகதிகளின் மனதில் "ஆறாத வடுவை" ஏற்படுத்திவிட்டது. உண்மையிலேயே பாதுகாப்பைத் தேடி இங்கு வந்த அவர்கள் பாதுகாப்பற்ற ஒரு தன்மையை உணர்கின்றார்கள் என ஈரோஸ் இயக்கத் தலைவர் பாலகுமார் கூறியுள்ளார்.

'தமிழ் நாடு மாநிலத்தில் நாங்கள் தங்கியிருப்பதை விரும்பவில்லை என அரசாங்கமும் பொலிஸாரும் கூறுவாரானால், அதற்கான ஏற்பாடுகளையும் உருவாக்காமல் வெளியேறிவிட ஈரோஸ்தயாராய் உள்ளது எனக் கூறியிருக்கும் பாலகுமார், எங்களை மறைமுகமாகப் பயமுறுத்துவதற்கு எதுவித தேவையுமில்லை. தமிழ்த் தீவிரவாதிகளை ரிமாண்ட் கைதிகள் போல் விசாரிக்கப் புகைப்படங்களை எடுப்பது தமிழ் நாடு பொலிஸாருக்கு பெருமைக்குரிய விடயம் அல்ல. எந்தவிதமான சட்டம்–ஒழுங்கு பிரச்சினையையும் உருவாக்காமல் அதிகாரிகளுடன் ஒத்துழைத்து வந்த ஈரோஸ் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை விசேடமாகக் கவலைக்குரியது. "கிறிமினல்களைத் தேடுவது போல் பொலிஸார் நடந்து கொண்ட முறை ஈரோஸிற்கு புரியவில்லை. எனத் தெரிவித்தார்.

தமிழ் நாட்டு மக்களுடன் தங்களுக்குள்ள "இரத்த தொடர்புகள்" காரணமாகத்தான் இலங்கைத் தமிழர்கள் அங்கு ஓடி வந்தார்கள். ஆனால் "திங்களப் பொலிஸாரின்" இத்தகைய ரீதியில் நடத்தப்பட்ட தமிழர்கட்டு தமிழ்நாடு பொலிஸாரின் நடவடிக்கைபுதியதல்ல, என்றாலும் உண்மையில் அவர்களின் மனம் புண்பட்டுவிட்டது. தமிழ் நாடு பொலிஸாரின் செயல் ஈரோஸ் இயக்கத்தின் கொள்கைகளை மாற்றுத்மாறுக, தமிழர்களை நசுக்குவதற்கு இலங்கை அரசுக்கே உதவும் எனப் பாலகுமார் மேலும் தெரிவித்தார்.

## புளொட் அறிக்கை

தமிழ் ஈழமக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தீவிரவாத இயக்கங்களின் போராளிகளையும் தலைவர்களையும் கைது செய்வதில் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் மாநில பொலிஸார் நடந்து கொண்ட முறை கவலை தருவதாக புளொட் இயக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவர்கள் தொடர்ச்சியாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருப்பது கவலைக்குரியது மாத்திரமல்ல, முற்றிலும் அவசியமற்றதும் கூட. போராளிகளையும் தலைவர்களையும் புகைப்படம் எடுத்த செயலை அவமானப் படுத்தி. அச்சுறுத்தலைக்கும் கைங்கரியமாகவே வர்ணிக்க முடியும். இது தமிழ் ஈழமக்களின் முழுப்போராட்டத்திற்கும் அவமானத்தைத் தேடித் தருவதாகவுள்ளது என புளொட் மேலும் கூறியுள்ளது.

# ஹர்த்தால

மட்டக்களப்பு,

இஸ்லாமிய எழுச்சி இயக்கமும ஈழவர் முன்னணியும் சேர்ந்து இன்று காத்தான்குடியில் ஹர்த்தாலை அனுஷ்டிக்க இருக்கின்றனர்.

இது தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் நேற்று இங்கு பரவலாக வெளியிடப்பட்டுள்ளன.

## யாழ் கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல் நால்வர் பலி

23.11

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து வெள்ளி காலையும் மாலையும் நடைபெற்ற ஷெல் தாக்குதல்களில் நால்வர் மரணமடைந்ததாகவும் பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாலை ஆரம்பித்த ஷெல் தாக்குதல் நண்பகல் வரை நீடித்தது. அதன் பின் ஏற்பட்ட ஓய்வை அடுத்து மாலை சுமார் 5 மணியளவில் மீண்டும் ஷெல் தாக்குதல் ஆரம்பித்தது.

மாலையில் நடந்த ஷெல் தாக்குதலின் போது யாழ். பழைய மார்க்கட் பகுதியில் உள்ள வாழைப்பழக்கடையில் ஷெல் விழுந்து வெடித்ததினால் மூவர் மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. இவர்களில் ஒருவர் முஸ்லிம் என கூறப்பட்டது.

## தமிழகத்தில் பறிமுதல்

23.11

23.11

தமிழகத்திலுள்ள தீவிரவாத இயக்கங்களின் வீடுகளை வெள்ளியன்று முற்றுகையிட்ட தமிழக பொலிஸார், இயக்கத்தினர் வசமிருந்த வானொலித் தொடர் கருவிகளையும், இதர தொடர்பு சாதனங்களையும் கைப்பற்றியுள்ளதாக தமிழகத்திலிருந்து கொழும்புக்கு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழகம் எங்கும் இந்த பறிமுதல் வேட்டை ஏககாலத்தில் நடந்தகாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தமது வானொலி தொடர்பு சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதை சென்னையில் வைத்து ஊர்ஜிதம் செய்தனர்.

டெலோ, ஈ. பி. ஆர். எல். எப். இயக்க வீடுகளையும் பொலிஸார் சோதனையிட்டபோதும், அவர்கள் வசம் எதுவித வானொலி சாதனங்களும் இல்லாததால் பொலிஸார் வெறுங்கையுடன் திரும்பியதாகவும் சொல்லப்பட்டது.

# புதுடில்லியில் நேற்றும் பேச்சு

20.11.

(எம். பாலச்சந்திரன்)

இனப் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசாங்கம் தற்போது முன்வைத்துள்ள யோசனைகளுக்கும், தமிழர் அபிலாஷைகளுக்கும் இடையிலான இடைவெளியை மேவுவதற்கான முயற்சிகளில் தற்போது இந்திய அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது என இந்திய தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்காக தற்போது விரிவானதும், விபரமானதுமான பேச்சுவார்த்தைகள் புதுடில்லியில் நடைபெற்று வருகின்றன. தற்போது இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கைக்கான இந்திய தூதுவர் திரு. ஜே. என். தீக்ஷித் புதுடில்லியிலும் சென்னையிலும் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்திவிட்டு பெரும்பாலும் இம்மாத இறுதியில் இலங்கை திரும்புவார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதே வேளையில் புதுடில்லியில் இந்திய அதிகாரிகளுடன் இலங்கை அரசாங்கம் முன் வைத்த யோசனைகளை பற்றி நேற்று மேலும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த இலங்கை வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது நேற்றிரவு இலங்கை திரும்ப இருந்தார்.

## ஈரோஸ் தட்டிக் கொடுக்கிறது

20.11

சென்னை,

பெங்களூரில் நடந்த பேச்சுவார்த்தைகளின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அழைக்கப்பட்டிருந்தமை இலங்கை தமிழர்களின் அரசியல் தலைமைத்துவம் தமிழர் விடுதலைக் கூட்டணியிடமிருந்து புலிகள் இயக்கத்துக்கு மாற்றப்பட்டிருப்பதை எடுத்துக்காட்டுவதாயிருக்கிறது என சென்னையில் விடுத்த அறிக்கையொன்றில் ஈரோஸ் தெரிவித்துள்ளது.

இந்த அரசியல் தலைமைத்துவ மாற்றத்தை ஈரோஸ் வரவேற்கிறது என்றும் இது குறிப்பிடத் தக்க வரலாறு மாற்றமென்றும் ஈரோஸ் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## டெலோ தலைவருக்கு டில்லி அழைப்பு

23.11

இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான சமாதான திட்டம் குறித்து மற்றொரு சுற்று பேச்சு வார்த்தைக்காக "டெலோ" இயக்கத் தலைவர் செல்வம் புதுடில்லிக்கு வருமாறு இந்திய வெளியுறவு அமைச்சினால் அழைக்கப்பட்டிருப்பதாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஜேர்மன் மனநோயாளி தாக்கி இருவர் மரணம்

19. 11.

மூல்லேரியா மனநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மனநோயாளி தாக்குதல் நடத்தியதால் சகநோயாளிகள் இருவர் கொல்லப்பட்டனர். மற்றும் 5 பேர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் ஞாயிறு இரவு இடம் பெற்றுள்ளது.

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஜெய்ரட் கோடஸ் என்னும் 40 வயது மதிக்கத்தக்க சில தினங்களுக்கு முன் வெள்ளவத்தையில் உள்ள கடையொன்றில் சிகரெட் கொள்வனவுசெய்துவிட்டு பணம் கொடுக்காது தர்வாரெனவும் நடனமாடினாராம். பொலிஸார் கைது செய்து சம்பந்தப்பட்ட நீதிமன்ற அலுவலகத்தில் கையளித்தனராம்.

இவர் மனநோயால் பீடிக்கப்பட்டவரென்பதால் முல்லேரியா மனநோயாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

ஞாயிறு நள்ளிரவு இவர் தடியொன்றை எடுத்து சக நோயாளிகளை தாக்க தொடங்கினாராம்.

இதனால் கல்முனையைச் சேர்ந்த ஆதம்பாவா, (40 வயது) களுத்துறையைச் சேர்ந்த ஆர். ஆனந்த என்னும் சக மனநோயாளர்கள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து மரணமானார்கள்.

மற்றும் ஐந்து மனநோயாளர்கள் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

சந்தேக நபரான ஜேர்மன் பிரஜையை அங்கொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## வெல்லாவெளியில் குண்டு வீச்சு

22. 11. 86

மண்டூர்,

வெல்லாவெளி – உகனை வீதியில் ரோந்து சென்ற வெல்லாவெளிப் பொலிசார் மீது மறைந்திருந்த தீவிரவாதிகள் கைக்குண்டுகளை வீசியுள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் பொலிசாருக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகிறது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சிலர் காயமடைந்தனர். சிலர் கைது செய்யப்பட்டனர்.

# முல்லைத்தீவு வேட்டையில் 9 பயங்கரவாதிகள் பலி!

## ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

(எஸ். என். பிள்ளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் 9 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் ஒரு படைவீரர் காயமடைந்தார் எனவும் கூட்டுப்படை தலைமை அலுவலகம் தெரிவித்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை காலை 6 மணி முதல் நேற்று காலை 6 மணிவரை ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அம் மாவட்டத்தின் தண்ணீரூற்று, தண்ணிமுறிப்புக்குளம், முள்ளியவளை ஆகிய இடங்களில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் நடத்தியுள்ளனர்.

பயங்கரவாதிகளிடம் இருந்து பெருந் தொகையான உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கண்ணி வெடி, ஆயுதங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டன எனவும் கூட்டுப் படை தலைமை அலுவலகம் தெரிவித்தது.

பொலன்னறுவை முத்துகல என்னுமிடத்தில் ஒரு பயங்கரவாதி சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் மற்றும் இருவர் கைது செய்யப்பட்டதாகவும் கூட்டுப் படை தலைமை அலுவலகம் மேலும் தெரிவித்தது.

## 21. 11. விஜிதரனை ஒப்படைப்பது இயக்கங்களின் பொறுப்பு

யாழ்நகர்,

யாழ். குடாநாடு தமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக சகல விடுதலை இயக்கங்களும் உரிமைகோரி வரும் இவ்வேளையிலேயே யாழ். பல்கலைக்கழக மாணவனான விஜிதரன் மர்மமான முறையில் காணாமற் போயுள்ளார். இவரை தேடி எம்மிடம் ஒப்படைக்க வேண்டியது சகல விடுதலை இயக்கங்களினதும் பொறுப்பாகும்.'

இவ்வாறு நேற்று நடத்திய பத்திரிகையாளர்களின் மகாநாட்டில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பு கோரிக்கை விடுத்தது:

மாணவர் அமைப்பு மேலும் தெரிவிப்பதாவது:

மேற்படி மாணவனின் மறைவுபற்றி சகல இயக்கங்களும் கைவிரிப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேவேளை எந்தவொரு இயக்கத்திற்கெதிராகவும் நாம் குற்றம் சுமத்தாமல் கண்டுபிடித்து தருமாறு கேட்பதோடு இந்த அராஜகத்திற்கெதிராக போராடவும் முன்வந்துள்ளோம்.

விஜிதரன் காணாமற் போய் பதினேழு நாட்களாகியும் இதுவரை எதுவித தகவல்களும் எமக்கு கிடைக்கவில்லை. பல அறிக்கைகள் எம்மால் விடப்பட்டு பல வெளிக்காததால் வகுப்பு பகிஷ்கரிப்பு, வீதி மறியல் போராட்டம் ஆகியவற்றையும் மேற்கொண்டும் அவர் விடுதலை செய்யப்படவில்லை.

இதனால் கடந்த 13ஆம்திகதி முதல் உண்ணாவிரதத்தினை மேற்கொண்டும் எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. ' இதனையடுத்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் வெளியார் ஒருவர் உட்பட பல்கலைக்கழக மாணவ, மாணவியர் அறுவர் குதித்துள்ளனர்.

இ. குகதாசன், ஜே.எச். செல்வநாயகம், ரி. விமலேஸ்வரன், எஸ். பிரசாத்(வெளியார்), செல்வி எஸ்.கோகிலேஸ்வரி, செல்வி எம்.விஜயகுமாரி ஆகியோரே இவ் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக சுமார் ஐம்பது மாணவர்கள் நேற்று ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

### மிரட்டல்

எமது நியாயமான போராட்டத்திற்கு இதுவரை மூன்று தடவைகள் மிரட்டல்கள் விடப்பட்டன. எனினும் போராட்டம் வெற்றிபெறும் போது, மத தாபனங்கள் ஒத்துழைக்க வேண்டும் என கோருகிறோம். மாணவரின் மர்ம மறைவு குறித்து கிராம மக்களிடையே விளக்குவதற்கு மாணவர் குழுக்களை அமைக்கவிருக்கிறோம்.

## தமிழர் துயர் போக்க இந்திய அரசியல் கட்சிகள் கூட்டாக கோரிக்கை

புதுடில்லி,

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்கு முறை நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வரச் செய்ய இலங்கை அரசாங்கம் மீது இந்திய அரசாங்கம் நிர்ப்பந்தம் பிரயோகிக்க வேண்டுமென இந்தியாவின் தேசிய அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்திருப்பதாக "இந்து" பத்திரிகை செய்தியொன்று கூறுகின்றது.

இக் கோரிக்கை அடங்கிய அறிக்கை யொன்றில் இக் கட்சிகளின் பிரதிநிதிகள் கையெழுத்திட்டுள்ளனர். தமிழ் மக்களின் கஷ்டங்கள் குறித்து இலங்கை அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்வதாக அந்த அறிக்கையில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல். கே. அத்வானி (பாரதிய ஜனதா கட்சி), பி. உபேந்திரா (தெலுங்குதேசம்) இந்திர ஜித் குப்தா (இந்திய கம்யூ. கட்சி), எஸ்.பி. மாளவியா (லோக்தள்), ஏ.ஜி. குல்கர்னி (காங். எஸ்.), ஸைபுதீன் சொஸ் (தேசிய காங்கிரஸ்) பாபு கல்டேட் (ஜனதா), நாமகன சல்கியா (ஏ.ஜி.ரி.), வி. கோபாலசாமி, என். வி.என். சோமு (தி.மு.க.), ஆலடி அருணா (அ.தி.மு.க.), சிட்ட பாஸு (பார்வார்ட் புளக்), லெப். ஜெனரல் அரோரா (அகாலிதள்), ஆகியோரே அறிக்கையில் கையெழுத்திட்டுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாவர்.

### ஈ. பி. ஆர். எல். எப். ஏற்கவில்லை

இதற்கிடையில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஏகப் பிரதிநிதியாக ஈ.பி. ஆர்.எல். எப். இயக்கமோ தமிழ் மக்களோ அங்கீகரிக்கவில்லை என்று அந்த இயக்கம் சென்னையில் கூறியிருப்பதாகவும் "இந்து" செய்தியொன்று கூறுகின்றது.

விடுதலைப் புலிகளின் பங்கு பற்றிய கருத்து வேறுபாட்டால் கடந்த செவ்வாய்க்கிழமை கூட்டப்பட்ட ஈ.என்.எல்.எப். (ஈரோஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் அங்கம் வகிப்பது, கூட்டம் இடையிலேயே முடிவுற்றதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

22. 11.

www.tamilarangam.net

# தமிழ்நாடு அரசின் ஹிந்தி எதிர்ப்பு! 21.11.86

"ஆங்கிலம் தொடர்ந்து இந்தியாவின் உத்தியோக மொழியாக இருக்க வேண்டும். இந்திய அரசியல் அமைப்பிலும் இது உறுதிப்படுத்தப்பட வேண்டும்."

இப்படி ஒரு தீர்மானத்தை தமிழ் நாடு சட்டசபை நிறைவேற்றியுள்ளது ஏன்?

பார்த்த பார்வையில் தீர்மானம் மிகச் சாதாரணமாக ஒலிக்கிறது. தீர்மானம் முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். பெயரில் கொண்டு வரப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தீர்மானத்தின் ஓட்டம் இப்படி அமைகிறது.

இந்திய அரசியல் அமைப்பின் 27 ஆம் பகுதியில் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள — ஏற்றுக்கொள்ளப் படப்போகும் (இதுவரை 16 மொழிகள் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளன) மொழிகள் யாவும் இந்தியாவின் உத்தியோக மொழிகளாக ஏற்றுக் கொள்ளப் படும் வரை தொடர்ந்து ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருக்க வேண்டும் என்கிறது தீர்மானம்.

இதுவரை இந்திய அரசின் தலைவர்கள் இது தொடர்பாக தந்துள்ள உறுதிமொழி போதாது! அரசியல் அமைப்பிலும் இதுவரையறுத்துக் கூறப் பட வேண்டும், என்கிறது தமிழ் நாடு அரசின் தீர்மானம்.

இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகிய மூவரும் "இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை இந்தி மொழியோடு அங்கிலமும் இந்தியாவின் உத்தியோக மொழியாக பயன்படுத்த முடியும்" என உறுதிமொழி தந்துள்ளார்கள்.

சீன இந்தியாவைத் தாக்கியதால் சீன — இந்திய யுத்தம் 1962 இல் தொடங்கிய போதே முதல் தடவையாக பிரதமர் நேரு இந்த உறுதிமொழியைத் தந்தார். நாட்டின் ஒற்றுமையைக் காப்பாற்றும் நோக்கத்தோடும், அன்று பிரிவினையைக் கோரி ஹிந்தித் திணிப்பை எதிர்த்த தமிழ்நாட்டைச் சாந்தப்படுத்துவதற்காகவும், நேரு உறுதியளித்தார்.

"தொடர்ந்து ஆங்கிலம் உத்தியோக மொழியாக" இருக்கும் என்பது வெறும் உறுதி மொழியே நடைமுறையில் ஹிந்தி திணிப்பு நடைபெற்று வருகிறது.

எனவே இன்றைய அவசியத் தேவை ஆங்கிலம் உத்தியோக மொழியாக ஏற்றுக் கொள்ளதும் அரசியல் அமைப்பில் எழுதிவிடுவதுமாகும். ஹிந்தி பேசாதவர்கள் அச்சத்தைப் போக்குவதற்கு ஆங்கிலம் 'தேவை" என்கிறார் தமிழ்நாடு சட்டசபையில் தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசிய கல்வி அமைச்சர் பொன்னையன்.

ஹிந்தி திணிப்புக்கு எதிராக தமிழ் மக்களிடையே எழுந்துள்ள ஆத்திரம் வெகு வலுவாக தெளிவாக அமைச்சர் பொன்னையன் பேச்சில் ஒலிக்கிறது.

தேசிய ஒருமைப்பாட்டின் பெயரால் — ஹிந்தி ஒற்றுமையை நிலைநாட்டும் என்ற நம்பிக்கையில் — ஹிந்தி திணிப்பு கொண்டு வரப்படுகிறது. ஆனால் ஹிந்தியைத் திணிக்கப் போய் நிச்சயம் ஒருமைப்பாடு சிதறும் — என அபாய அறிவிப்புத் தெரிவிக்கிறார், அமைச்சர்.

ஹிந்திக்கு இந்தியாவின் உத்தியோக மொழியாவதற்கு என்ன அருகதை இருக்கிறது? என அமைச்சர் கேட்கிறார். இந்தியாவில் உள்ள 9 மாநிலங்களில் மட்டுமே ஹிந்தி பேசப்படுகிறது — அதுவும் பேசப்படும் ஹிந்தி மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசம். இது போக 21 மாநிலங்களில் வெவ்வேறு மொழிகள் பேசப்படுகின்றன என்று குறிப்பிடுகிறார்.

"இந்திய மத்திய அரசு ஹிந்தியைப் பரப்புவதற்காக எல்லா முயற்சியும் எடுக்க வேண்டும் — அது இந்திய அரசின் கடமை. இந்திய அரசு இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலும் வாழும் மக்கள் பேசிக் கருத்து பரிமாறலுக்குப் பயன்படுத்த வேண்டும்" என அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக்காட்டி [illegible] செய்கிறார். மத்திய அரசின் ஹிந்தி பரப்பும் பணியை கேலி செய்கிறார்.

எனவே தான் தமிழ் நாடு அரசு தீர்மானம், நேரடியாகவே ஹிந்திக்கு அடிகொடுக்கிறது என செய்தி விநோதனால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

மும்மொழிக் கொள்கைத் திட்டம் ஏன்! ஒரு [illegible] முன்னர் ஹிந்தி பேசாத மாநிலங்கள் மீது திணித்ததையும் அவர் [illegible] பேச்சில் நினைவுபடுத்துகிறார்.

அதாவது இந்தியாவின் மாநிலங்களில், ஹிந்தி ஆங்கிலம் தங்கள் பிரதேச மொழி (தமிழ் நாட்டில் தமிழ்) ஆகிய மும்மொழிகளையும் கற்றுக் கொள்ள வேண்டியது பற்றிய திட்டத்தை இந்திய அரசு அன்று கொண்டு வந்தது. இதில் வேடிக்கை என்னவென்றால் ஹிந்தி மாகாணங்களுக்கு, நடைமுறையில் இரண்டு மொழிக் கொள்கையே ஆகும்.

அதாவது தங்கள் பிரதேச மொழியாகிய ஹிந்தியும் ஆங்கிலமும். ஆங்கிலம் கற்றுக் கொள்ளும் ஹிந்தி பேசும் மாகாணங்களில் எவ்வித அக்கறையும் இல்லை. ஏனெனில் ஹிந்தியே இந்தியாவின் உத்தியோக மொழியாகி விட்டால் ஆங்கிலம் தேவையில்லை என்ற உணர்வு ஏற்பட்டது. இருந்தும் மும்மொழிக் கொள்கை என்றால் ஏனைய மாகாணங்கள் மீது வலுக்கட்டாயமாக மூன்று மொழிகளைத் திணிப்பதும், ஹிந்தி பேசும் மாகாணங்களுக்குப் படிக்க வேண்டியது ஒரு மொழியே — இந்தி.

மத்திய அரசு உத்தியோகங்கள் பார்ப்பதற்கு போட்டிப் பரீட்சைகள் நடக்கும் போது ஹிந்தி பேசாத மாகாணங்களில் உள்ள மாணவர்கள், ஆங்கிலம், அல்லது ஹிந்தியில் — அந்நிய மொழிகளில் எழுதுவார்கள்.

ஆனால் ஹிந்தி மாகாணத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் தாய் மொழியாகிய — பிரதேச மொழியாகிய ஹிந்தியிலேயே எழுதுவார்கள். இதனால் ஹிந்தி பேசும் மாணவர்களுக்கு அநுகூலமாக — இருக்கும் அதே நேரத்தில் ஹிந்தி பேசாத மாணவர்களுக்கு பிரதிகூலமாக இருக்கும், இதையும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த ஹிந்தி எதிர்ப்பில் வேறு எக்காலத்திலும் இராத அளவு எதிர்ப்பு இருக்கிறது என்பது தெளிவாகிறது. பழைய ஹிந்தி எதிர்ப்புப் போராட்டங்களைப் பற்றி எல்லாம் அமைச்சர் நினைவுபடுத்திச் சட்டசபையில் விளக்கினார்.

எந்த இந்திரா காங்கிரஸ் கட்சியோடு அண்ணா டி. எம். கே. நல்லுறவு கொண்டாடுகிறதோ, அந்த காங்கிரஸ் கட்சிக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கையாக இது அமையும்.

தி. மு. கழகம் வழிப்போடு பார்த்துக் கொண்டிருக்கிறது. ஹிந்தி திணிப்பை — இந்த நிலைப்பாட்டை தமிழ் நாடு அரசு எடுப்பதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர் இருந்து கொண்டு ஒரு உரிமைப் போராட்டம் நடத்துவதும் இப்படி நேரடியாகவே ஹிந்திக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், தீர்மானம் நிறைவேற்றவும் மூன் வந்திருக்கலாம்.

இந்திரா காங்கிரஸ் தமிழ் நாட்டில், அதிக சக்தியைப் பெற்ற ஒரு கட்சியாகி வருவதைத் தடுப்பதற்காகச் செய்யாகும் ஒரு நடவடிக்கையாகக் கூட தமிழ்நாடு அரசின் தீர்மானம் நிறைவேற்றல் இருக்கலாம். [illegible]

எப்படியோ ஹிந்தி எதிர்ப்பு இன்று பெரிய பரிமாணத்தை அடைந்துள்ளது. இதற்கு முன் எப்போதும் இல்லாததையும் விட என்பதை மட்டும் நிச்சயமாகக் கூறலாம்.

# ஐவர் கொண்ட குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு செலவு என்ன?

## சபையில் அக்மீமன எம்.பி. சமர்ப்பித்த கணக்கு விபரம்!

ஐந்து பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு ஒரு நாளைக்கு சாப்பாட்டிற்கும் பிரயாணத்துக்கும் செலவாகும் தொகை எவ்வளவு?

இந்த விபரத்தை கணக்குகளுடன் பகிரங்கப்படுத்தினார் அக்மீமன எம். பி. திரு. ரிச்சர்ட் பத்திரன.

அவர் அப்போது கூறியதாவது:

ஐவர் கொண்ட ஒரு குடும்பத்தின் காலை தேநீருக்கும் பாண் தேங்காய் சம்பல் சாப்பாட்டிற்கு 19.45 சதம் செலவாகிறது. பாண் இரண்டு இறாத்தல் 6.20 சதம். தேங்காய் 1 ரூபா 50 சதம், கொச்சிக்காய் 1 ரூபா 50 சதம், வெங்காயம் 70 சதம், தேசிக்காய் 1 ரூபா 50 சதம். ஒரு தேநீர் 1ரூபா 50 சதம் வீதம் 5 தேநீருக்கு 7 ரூபா 50 சதம். மற்றது விறகு செலவு.

முற்பகல் பத்து மணிக்கு வீட்டிலுள்ள தாய் தேநீர் குடிக்க 1 ரூபா 50 சதம். பாடசாலை சென்ற பிள்ளைகளுக்கு தேநீர், பணிஸ் செலவும், தொழிலுக்குச் சென்ற தந்தைக்கு தேநீர், சிகரட் செலவும் 6 ரூபா 75 சதம்.

20.11.86

மறுபக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முன் பக்க தொடர்ச்சி.....

சபாநாயகர்: இது என்ன கணக்கு

திரு. ரிச்சர்ட் பத்திரன: இதுநான் தயாரித்த குடும்பச் செலவு விபரம்.

சபாநாயகர்: நீங்கள் வாழைப்பழத்துக்கு ஒரு ரூபா போட்டிருக்கிறீர்கள். வாழைப்பழ விலை 40, 50 சதம் அல்லவா?

திரு. ரிச்சர்ட் பத்திரன: இதே குடும்பத்துக்கு பகல் சாப்பாட்டிற்கு 41 ரூபா தேவை. மாலை தேநீருக்கு 8 ரூபா 50 சதம் தேவை. இரவு சாப்பாட்டுக்கு 27 ரூபா தேவை. இரவு சாப்பாட்டுக்கு சோறு. கருவாடு, போஞ்சி.

சபாநாயகர்:- இரவு சாப்பாட்டு'போஞ்சிக்கு' என்ன விலை போட்டிருக்கிறீர்கள்?

திரு. பத்திரன:- போஞ்சி 250க்கு 4ரூபா:

சபாநாயகர்:- அப்படியானால் ஒரு கிலோ போஞ்சி 16ரூபாவா?

திரு. பத்திரன:- சரி போஞ்சி விலையைக் குறைத்துப் பார்ப்போம். பஸ் பிரயாணத்துக்கு 25ரூபா 50சதம் தேவை. ஒரு நாளைக்கு மொத்தம் 131ரூபா 45சதம் தேவை ஒரு குடும்பத்துக்கு. இப்படியிருக்க இந்த குடும்பத்தினர் கல்யாணம் மற்றும் வைபவங்களுக்குப் போவதில்லையா? படம் பார்க்கப் போவதில்லையா? நோய் வந்தால் மருந்து வாங்குவதில்லையா? 50ரூபா தினச்சம்பளம் வாங்கும் ஒரு குடும்பம் இவ்வளவு செலவுகளையும் எப்படி சமாளிக்க முடியும்?

ஒரு குரல்:- 'அடி' அடிக்க செலவு.

திரு. பத்:- ஆம். இருந்திருந்து 'அடி' அடிக்க வேறு செலவு. ஐவர் கொண்ட ஒரு குடும்பத்தின் ஒருநாளைய செலவை 100ரூபாவாகக் குறைத்துப் பார்த்தாலும் [illegible]ரூபா சம்பளம் பெறுவோர் எப்படி வாழ்க்கை நடத்த முடியும்?

பிரதியமைச்சர் எச்- பி. அபேரத்ன!- உங்கள் ஆட்சியில் சீனி இல்லாமல் தேநீர், தேங்காய்இல்லாமல் சம்பல், அரிசி இல்லாமல் சோறு, மிளகாய் இல்லாமல் சொதி. அப்படியானால் எங்கே செலவு. ஆடையில்லாமல் இருப்போம் என்றும் சொல்லியவர்களாச்சே நீங்கள்.

# அரசியல் அதிர் வேட்டுகள்

(எம். பி. எம். அஸ்ஹர், இ. தம்பையா)

திரு: அமரசிறி தொடங்கொட: விவசாயத்தை நாசப்படுத்தக்கூடிய இரசாயன வகைகள் தற்போது இலங்கையில் பாவிக்கப்படுகின்றன.

ஒரு குரல்: எங்கிருந்து தகவல் பெற்றீர்கள்?

திரு. தொடங்கொட: எனது தஸ்தாவேஜுகளிலிருந்து ஒரு புத்தகமாகவே இதனை நான் அச்சிட்டுள்ளேன், மகாவலி அழைப்பிதழை பல லட்சம் ரூபா செலவில் அச்சிட முடியுமானால் முப்பது ரூபா செலவில் நான் ஒரு புத்தகத்தை அச்சிடமுடியாதா?

திரு. பி. எம். பி. சிறில்: அதற்கு தடை இல்லையே?

நிதியமைச்சர்: உங்கள் ஆட்சியில் கிருமிநாசினி மருந்துக்குக்கூட கிடைக்கவில்லையே?

திரு. தொடங்கொட: அது பெரிய விஷயம்தான்.

திரு. தொடங்கொட: ஒரு காலத்தில் எமது தலைவர்கள் லிஸ்பனுக்குப் போனார்கள். பின்னர் அம்ஸ்டர்டேம் போனார்கள். பின்னர் லண்டனுக்குப் போனார்கள் இன்று எமது நாட்டு விவகாரத்துக்கு ஆலோசனை பெற வாஷிங்டனுக்கு, பேர்லினுக்கு அல்லது டோக்கியோவுக்குப் போகிறார்கள்.

திரு. தொடங்கொட: நாட்டுப்புறங்களில் பாம்பு கடித்தால் கொழும்புக்கு வரவேண்டும் இன்செக்ஷன் மருந்து வாங்க. அந்த மருந்தின் விலையோ மிக மிக அதிகம். கொழும்பிலும் பாம்புகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை இரத்தப் புடையன்கள்.

திரு. தொடங்கொட: மருந்து விலைகளைப் பார்க்கும்போது சாகத் தோன்றுகிறது. சவப்பெட்டியின் விலையைப் பார்க்கும்போது மீண்டும் உயிர்வாழத் தோன்றுகிறது.

19.11.86

திரு. தொடங்கொட: நாம் சிறுவயதில் பம்பாய்மிட்டாய் வாங்கிச்சாப்பிடுவோம். வாயில் பட்டவுடன் கரைந்துவிடக்கூடியது பம்பாய்மிட்டாய். நிதியமைச்சர் சமர்ப்பித்துள்ள வரவு-செலவுத்திட்டம் இந்த பம்பாய் மிட்டாய் போன்றதே.

அமைச்சர் காமினி திசாநாயக்க: எமது நிதியமைச்சர்கூட அவரது இளமைக்காலத்தில் காணி உச்சவரம்பு 50 ஏக்கரிலிருந்து 5 ஏக்கராக குறைக்கப்படுவதும் நல்லதே என்று நம்பினார்.

நிதி அமைச்சர்: நம்பவில்லை!

அமைச்சர் காமினிதிசாநாயக்க: காங்கிரஸ்காரர்கள்:

நிதி அமைச்சர்: கருதவுமில்லை! காணி உச்சவரம்புக்கு பூரண ஆதரவை நல்கினேன்.

அமைச்சர் காமினிதிசாநாயக்க: எமது [illegible] பல [illegible] பார்ப்பு [illegible] பாம்பே இருக்கும் [illegible] எம். பி. வெளிநாட்டு எம். பி.க்கள் மத்தியில் [illegible] வைத்து குறிப்பிட்டுள்ளார். அவர் [illegible] சிகிச்சை [illegible]

21.11.

திரு. அனில்முனசிங்க: 1984இல் [illegible] எனது பேச்சு 'சுகந்தமான காற்று' போன்றது [illegible] யமைச்சர் வருணித்தார். அந்த காற்று [illegible] ளது. இந்தக் காற்று இப்போது வீசும்போது [illegible] நிதியமைச்சர் அங்குமிங்கும் தள்ளப்படலாம்.

திரு. அனில் முனசிங்க: இறந்துகொண்டிருக்கும் தனியார் துறைக்கு நிதியமைச்சர் 'ஒக்ஸிஜன்' [illegible] கூறுவார்.

நிதியமைச்சர்: ஆனால் நான் தனியார் துறையைச் சாகடிப்பதாகக் கூறுகிறார்கள்!

திரு. அனில்முனசிங்க: அவர்கள் மடையர்கள்.

பிரதியமைச்சர் திரு. ஏ. எம். எஸ். அதிகாரி: இன்று சு. க. கல்வி எங்காவது போகும்போது மோட்டார் சைக்கிள் பவனியும் இடம் பெறுகிறது. சு. க. ஆட்சியில் இப்படி மோட்டார் சைக்கிள்கள் தாராளமாகக் கிடைத்தனவா?

திரு. டியூ குணசேகர: ஒரு டிஸ்பிரின்கூட வாங்காத சுகதேசிகளான குடும்பத்தினர் என வைத்துக்கொள்வோம். உறவினர், நண்பர்கள் வீடுகளுக்கு ஒரு போதும் போகாத, பட்டர் வாங்க வேண்டும் என்பதற்காக ரேடியோ கூட பாவிக்காத ஒரு குடும்பத்துக்கு சாப்பிடவும் படிக்கவும் மட்டும் மாதம் 2 ஆயிரத்து 55 ரூபா தேவை.

சபாநாயகர்: எத்தனை பேருள்ள குடும்பம் அது?

திரு. டியூ. குணசேக்கர: மூன்று பிள்ளைகள் தந்தை தாய் உள்ள குடும்பத்துக்கு கணவன் மட்டுமே இக் குடும்பத்தில் உழைப்பவன்.

ஒரு குரல்: ஏன் துபாய் போய் உழைக்கலாமே?

திரு. டியூ. குணசேக்கர: நல்ல வருமானமுள்ள தொழிலை தேடிக்கொடுங்கள். அதற்காகத்தான் இதனை இங்கு கூறுகிறேன்.

திரு. வசந்த உதயரத்ன: த. வி. கூட்டணி எம். பி.க்கள இச்சபையில் இருந்தபோது அவர்களது இருக்கைகள் முழுமையாக காலியாக இருக்காது. ஆனால் சு. கட்சியினர் இருக்கைகள் பெரும்பாலும் காலியாகவே உள்ளன.

எதிர்க்கட்சித்தலைவர்: உங்கள் எம்.பி.க்கள் எங்கே? அமைச்சர்கள் எங்கே? இப்போது கூட போதிய உறுப்பினர்கள் இல்லையே.

20.11.

### போராட்டத்தை அங்கீகரிக்க கோரி வடக்கில் ஊர்வலங்கள்

யாழ்நகர், "விடுதலைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும். போராளிகளிடமிருந்து பறிக்கப்பட்ட ஆயுதங்களை இந்தியா திருப்பிக் கொடுக்க வேண்டும்" என்பதை வலியுறுத்தி யாழ்மாவட்டத்தின பல்வேறு பகுதிகளிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறுகின்றன.

பல்வேறு தொழிற்சங்கங்கள், பொது நிறுவனங்கள், ஊழியர் [illegible] என்பன இந்த [illegible] களை நடத்துகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கமும்,

# ஜனாதிபதி அறிவிக்கும் புதிய

# ரஜீவ் - அமிர் இல்

(புதுடில்லி)

**இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தியை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் இன்று சந்தித்துப் பேசுகிறார். இம்மாதம் நடக்கும் சர்வகட்சி மகாநாட்டில் புதிய யோசனைகளை ஜனாதிபதி அறிவிக்கும்போது, தமது நிலை என்ன என்பதை திட்டவட்டமாக்கிக் கொள்வதற்கான மிக முக்கிய சந்திப்பாக இது இருக்குமென்று டில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

மறைந்த பிரதமர் இந்திராவின் சிறப்புப் பிரதிநிதியாக இங்கு வந்து இலங்கைத் தமிழர் விமோசனத்துக்கு ஏற்ற தீர்வைஏற்படுத்தமுயன்ற இந்திய வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளர் திரு ஜி. பார்த்தசாரதியின் அவசரமான அழைப்பை ஏற்றே நேற்று முன்தினம் அமிர்தலிங்கம் சென்னையிலிருந்து டில்லி விரைந்தார்.

டில்லி சென்ற திரு. அமிர்தலிங்கத்துடன் நேற்று திரு. பார்த்தசாரதி பேச்சுவார்த்தை நடத்தினர். ஜனாதிபதியின் புதிய அறிவிப்பு அடுத்த வாரம் சர்வகட்சி மகாநாட்டில் வெளியிடப்படும்போது, தமது நிலை என்ன என்பதே இப்போது கூட்டணியை எதிர்நோக்கும் பிரச்னையாக இருப்பதால், பார்த்தசாரதியுடன் நடாத்திய பேச்சுவார்த்தையில் இவ்விஷயம் குறித்து அமிர்தலிங்கம் ஆராய்ந்ததாகத் தெரிகிறது.

ஜனாதிபதியின் புதிய யோசனைஒன்று அடுத்தவாரம் ஜனாதிபதியால் கூட்டப்படவுள்ள சர்வகட்சி மகாநாட்டில் இனப் பிரச்னைக்குத் தீர்வு காணும்பொருட்டு அவரால் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்தப் புதிய யோசனை மாகாண சபையாக இருக்கலாம் என திரு. அமிர்தலிங்கத்துக்குச் செய்திகள் கிடைத்துள்ளன. இது குறித்தே பார்த்தசாரதியு

(4-ம் பக்க 3ம் கலம் பார்க்க)

## "இலங்கையில் இடப்

## இனப் படு

## தடுத்து நிறு

### காந்தி காமராஜ் தேசிய

சென்னை, டிச. 6

"இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலைகள் உடனடியாக தடுத்துநிறுத்தப்

## மீன்பிடிக் கப்பல் மூழ்கடிப்பு

[சென்னை]

இந்தியச் சின்னம் பொறித்த மீன்பிடிக் கப்பலொன்று கச்சதீவில் மூழ்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இது குறித்து இந்திய அரசு இலங்கை அரசிடம் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

இக் கப்பலில் வந்த 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாக இலங்கை அரசு தெரிவித்திருந்தது.

## குண்டுவைத்து தாக்கப்பட்ட வீடு தரைமட்டம்

(கல்வியங்காடு)

கல்வியங்காட்டிலுள்ள முக்குறுணி பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள அம்பிகைபாகனின் வீட்டை இராணுவத்தினர் நேற்றுப் பிற்பகல் குண்டு வைத்துத்தாக்கித் தரைமட்டமாக்கினர்.

கல்வியங்காட்டுச் சந்தியில் வைத்து மீன் வியாபாரி ஒருவரின் சைக்கிளும் சேதப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து கல்வியங்காட்டில் பதட்டம் நிலவியது. கடைகள் பூட்டப்பட்டன. வீதிகள் வெறிச்சோடிக்காணப்பட்டன. சுமார் அரைமணித்தியாலயம்வரை இராணுவத்தினர் அங்கு நின்றனர்.

கல்வியங்காட்டில் மூன்று இளைஞர்களை இராணுவத்தினர் கைதுசெய்ததாகவும் கூறப்பட்டது.

## இன்றைய யாழ்ப்பாண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ராணி** (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக
வயது வந்தவர்களுக்கு)

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - லக்ஷ்மி
ராஜராஜசோழன்
(கலர்)

**வின்ஸர்** (யாழ்)
10-30 மட்டும்
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
மு. கருணாநிதியின்
பூமாலை

தைப்பொங்கல் தினத்தில் [redacted]

# தமிழீழப் பிரகடனம்: 'ரெலோ' மறுப்பு

(யாழ்ப்பாணம்):

தைப்பொங்கல் தினத்தன்று தமிழீழப் பிரகடனத்தைத் தமது இயக்கம் செய்யப்போவதாகத் தமிழகத்தில் ரெலோ செயலாளர் சிறிசபாரத்தினம் தெரிவித்ததாக இலங்கை அரசு வெளியிட்ட செய்தி மறுக்கப்பட்டுள்ளது.

'ரெலோ' என்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் உத்தியோகபூர்வமான ஏடான 'எழுச்சி'யில் தை 14-ல் தமிழ் ஈழப் பிரகடனமா?' என்ற தலைப்பிட்டு முதல் பக்கத்தில் வெளியான செய்தியில் இந்த மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அச்செய்தி வருமாறு:-

1985ஆம் ஆண்டு தை மாதம் 14-ம் திகதி தமிழீழப் பிரகடனம்செய்யப்படுமென்று ரெலோவின் செயலதிபர் திரு. சிறி சபாரட்ணம் அவர்கள் இந்தியாவில் பேட்டியொன்றில் தெரிவித்ததாகக் கூறும் உண்மைக்குப் புறம்பான செய்தி கடந்த சில தினங்களாக ஸ்ரீலங்கா அரசினால் பரப்பப்பட்டு வருகின்றது. எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும், இயங்கிவரும் பிற்போக்கு சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் ஆரம்பித்துள்ள கூட்டுச்சதியே இதுவெனவும் எமது செயலதிபர் எந்தவொரு பேட்டியிலும் தை மாதம் 14-ந் திகதி தமிழீழப் பிரகடனம் என்ற கருத்தைத் தெரிவிக்கவில்லையெனவும் தமிழீழ மக்கள் அனைவருக்கும் உறுதியாகக் கூறிவைக்கிறோம்.

''கடந்த 28-11-84 அன்று ஸ்ரீலங்காரூபவாஹினிஒளிபரப்பில் ரெலோ இராணுவம் பயிற்சி பெற்றதாகக் காட்டப்பட்ட முகாம்கள் எதுவும் அதில் அறிவிக்கப்பட்ட இந்தியாவில் இல்லையெனவும் அவை அனைத்தும் தமிழீழத்தின் காடுகளிலேயே அமைக்கப்பட்டவையே எனவும் ரெலோ தமிழீழ மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றது என்பதாகும்.

---

சல் செய்யும் படி அரசு ...டுள்ளது.

அமெரிக்க அதிபர் றீகன், பிரிட்டிஷ் மகாராணியார், பிரிட்டிஷ்பிரதமர், பாப்பரசர், சீன அதிபர், இலங்கை ஜனாதிபதி உட்பட பல உலகத் தலைவர்கள் இந்திய அரசுக்கு இவ்விபத்து மரணங்கள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திருமதி. காந்தியின் மறைவுக்குப் பின்னர் கூடுதலான உலகத்தலைவர்கள் இம்மரணங்களுக்கே இந்தியாவுக்கு அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

---

## இன்று ஜி. ஸி. ... பாதிப்பு ... நடவடிக்...

(யாழ்ப்பாணம்)

''யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பரீட்சை நிலையங்களில் இன்று ஆரம்பமாகும் ஜி. ஸி. ஈ. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும், மாணவர்களுக்கும், அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்து எவ்வித பாதிப்பும் ஏற்படாதிருக்க நடவடி...

---

...வுள்ள சாவகச்சேரி மகாநாட்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்பொருட்டு அவரால் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்தப் புதிய யோசனை மாகாண ... சபையாக இருக்கலாம் என ...

---

புரட்சி[redacted]

# வாழ்த்துக்கள்!

[கொழும்பு]

கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஸ்தாபனங்களுக்கு தமிழீழ விடுதலை இயக்கத்தினர் [ரெலோ] புரட்சிகர வாழ்த்துக்கடிதங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

''தீவிரவாதிகளின் நடவடிக்கைகளுக்கு இலங்கையின் முதலாளித்துவ அரசு பதில் நடவடிக்கை எடுக்கும் போது நாம் உங்களின் உதவியை எதிர்பார்க்கிறோம்'' என்றும் இந்த வாழ்த்துக்கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

மோகன் என்பவர் கையெழுத்திட்டு அனுப்பியுள்ள இந்த வாழ்த்து கடிதங்களில் கைதடி சாவகச்சேரி தாக்குதல்கள் நியாயம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

தமிழர்கள் மீது அரச பயங்கரவாதம் தொடர்ந்து நடக்குமானால் பதில் தாக்குதல் தவிர்க்க முடியாதது என்று குறிப்பிட்டுள்ள அந்த வாழ்த்துக் கடிதத்தில்; அத்தருணத்தில் உங்கள் பூரண ஆதரவை எதிர்பார்க்கிறோம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதாம்.

---

# கப்பலில் கொழும்ப...

(யாழ்ப்பாணம்)

இராணுவம் யாழ் மாவட்டத்தில் கைது செய்த சுமார் 800 இளைஞர்கள் நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன் துறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். கப்பலில் கொழும்புக்கு அனுப்பிவைப்பதற்காகவே இவர்கள் காங்கேசன்துறை கொண்டு செல்லப்பட்டதாகத் தெரியவருகிறது. யாழ் கோட்டையில் இந்த...

---

குண்டுவைத்து

# வீடு தக...

(கல்வியங்காடு)

கல்வியங்காட்டிலுள்ள முக்குறுணி பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள அம்பிகைபாகனின் வீட்டை இராணுவத்தினர் நேற்றுப் பிற்பகல் குண்டு வைத்துத்தாக்கித் தரைமட்டமாக்கினர்.

கல்வியங்காட்டுச் சந்தியில் வைத்து மீன் வியாபாரி ஒருவரின் சைக்கிளும் சேதப்படுத்தப்பட்டது.

இன்...

